பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 20 புதன்கிழமை (03-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:98

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான சர்வஜன வாக்கெடுப்பே இந்தத்தேர்தல்!

## திருமலையில் தமிழ்க் கூட்டமைப்பு அறிவிப்பு

கன்னியா,மார்ச்3

**வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலைத் தங்களின் சுயநிர்ணய உரிமைக்கான சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதிச் செயற்படவேண்டுமென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருக்கின்றது. இதன்மூலம் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் ஒற்றுமையையும் கொள்கைப் பிடிப்பையும் திட்டவட்டமாக உணர்ந்துகொள்ளமுடியும் எனவும் கூட்டமைப்புக் கூறுகிறது.**

திருகோண்மலை மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாக திருகோணமலையில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்திலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. கடந்த திங்கள் அன்று சிவன்கோவிலடிப் பகுதியில் இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் இன்று முதல் வீடுவீடாகப் பிரசாரம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ்.மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் இன்று முதல் குடாநாட்டின் வீடுவீடாகச் சென்று பிரசாரப்பணிகளில் ஈடுபட விருக்கின்றனர். கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகத்தில் நேற்றுக் காலை கூடிய கூட்டமைப்பு வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரம் தொடர்பாக ஆராய்ந்தனர். வேட்பாளர்கள் ஒவ்வொருவர் தலைமையிலும் ஒவ்வொரு பகுதியில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வது என்றும் விருப்புவாக்குக்காக வேட்பாளர்கள் தனிப்பட்ட முறையிலும் பிரசாரங்களை மேற்கொள்வர் என்றும் அப்போது தீர்மானிக்கப்பட்டது. இதன்படி வீடுவீடாகச் சென்று இன்று முதல் கூட்டமைப்பு வேட்பாளர்கள் பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

குடாநாட்டில் தேர்தலை கட்டுக்கோப்பாகவும் சட்டம், ஒழுங்கு மீறப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடி அகற்றியபோது அது வெடித்ததால் பணியாளர் காயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்3

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 'ஹலோ ட்ரஸ்ட்' அமைப்பைச் சேர்ந்தவர்களில் இருவர் தற்செயலாக மிதிவெடி வெடித்ததில் கால் பகுதிகளில் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மை வெளிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் திருநெல்வேலியைச்சேர்ந்த அன்ரன் டிக்ஸன் (வயது 28), நாவற்குளியைச் சேர்ந்த யேசுதாஸன் பற்றிக் (வயது25) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

மிதிவெடி ஒன்றை நிலத்தில் இருந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவைக் கைதுசெய்யக் கோரும்மனு: பொலீஸிடம் விவரம் கேட்கிறது நீதிமன்று

கொழும்பு,மார்ச்3



விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாகத் தமது தரப்புக் கருத்துக்களை சமர்ப்பிக்கும்படி புலனாய்வுப் பிரிவு பணிப்பாளருக்கும், பொலீஸ் மா அதிபருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தலைவர் பிரபாகரனுக்கு மேல நீதிமன்றம் இருநூறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

அந்தத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு வே.பிரபாகரனை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுச் செய்யப்பட்டிருந்தது. 'ஹெல உறுமய' கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பிரதிபொலீஸ்மா அதிபருமான கொட்டக தெனிய இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக கொள்ளப்பட்ட சமயமே பொலீஸ் மா அதிபரும், புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரும் தமது கருத்துக்களை முன்வைக்க எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியது. (க)

## வேட்பாளருக்கு இராணுவப் பாதுகாப்பு

கொழும்பு,மார்ச்3

உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள வேட்பாளர்களுக்கு இராணுவ பாதுகாப்புகள் வழங்கப்படும். தற்சமயம் வழங்கப்படும் பொலீஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கான உத்தரவைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து வேட்பாளர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## தேர்தல் சுவரொட்டி ஒட்டிய 7பேர் பொலீஸாரால் கைது!

யாழ்ப்பாணம்,மார்ச்3

ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக்குழுவின் தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளை யாழ்.நகரப்பகுதியில் ஒட்டிக்கொண்டிருந்தவர்கள் என்று கூறப்படும் 7பேரைப் பொலீஸார் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர்.

பொதுத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் தமது அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டமுடியாது என்றும் - இதனைமீறிப் பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டுவோரைக் கைது செய்யுமாறு பொலீஸ்தலைமையகத்தினால் விசேடசுற்றறிக்கைஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும். அதற்கு அமைவாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும் யாழ். பொலீஸ்நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட 7பேரும் நேற்றுக் காலை விசாரணையின் பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும் - எனினும் தேர்தல் சட்டமீறல்(16ஆம் பக்கம்

## உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் சம்பவம்: ஈ.பி.டி.பி. உறுப்பினர் திங்களிரவு வாழைச்சேனையில் சுட்டுக்கொலை!

ஏறாவூர்,மார்ச்3

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் வாழைச் சேனையில் வைத்துக்கடந்த திங்கள் இரவு 9மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து தனது வீட்டுக்குச் செல்லும் வழியில் இவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுக இராணுவ முகாம், ஈ.பி.டி.பி. அலுவலகம் ஆகியவை அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் வைத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான பொன்னையா யோகேந்திரன் (வயது 27) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர் கொலைக்கு அமெரிக்கா கண்டனம்

கொழும்பு,மார்ச்3

மட்டக்களப்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தம்பிள்ளை சுட்டுக்கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தவன்முறைக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பாக இருக்கக்கூடும் எனக்கோடிகாட்டியுள்ள அமெரிக்க அரசுச் செயலக அறிக்கை, புலிகள் பயங்கரவாதச் செயல்களை நிறுத்தவேண்டும என்றும் கேட்டிருக்கிறது.

"ஐ.தே.வேட்பாளர் கொல்லப்பட்டதற்கு எவரும் உரிமை கோராத போதும் கூட விடுதலைப் புலிகள் அண்மையில் வெளியிட்டிருக்கும் அறிக்கை அவர்களின் ஒப்புதல் பெறாத வேட்பாளர்கள் தேர்தல் களத்திற்கு வருவதை ஊக்குவிக்காத நோக்கம் கொண்டவையாக அமைந்திருந்தன.

"தேர்தல் பிரசாரக் காலத்தில் விடுதலைப் புலிகள் பொறுப்புடன் (16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஐ.தே.மு. வேட்பாளர் இருவர் விலகல்!

கொழும்பு,மார்ச்3

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணிப்பட்டியலில் போட்டியிடும் இரு தமிழ் வேட்பாளர்கள் தாங்கள் போட்டியில் இருந்து விலகிக்கொள்கிறார்கள் எனத்தெரிவிக்கும் கடிதங்களை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்திருக்கின்றனர்.

மண்டூரைச்சேர்ந்த அமரசிங்கம் விநாயகமூர்த்தி, வாழைச்சேனையைச் சேர்ந்த காசுபதி பூபாலரட்ணம் ஆகியோரே போட்டியிலிருந்து விலகிக்கொள்வது குறித்து அறிவித்திருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.முன்னணி சார்பில் போட்டியிட்ட சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை என்பவர் இனம்தெரியாதோரால் கடந்த முதலாம் திகதி அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே. தேர்தலில் ஒரு கட்சிசார்பாக போட்டியிடுவதற்கு (16ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.6மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.



NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

# தகவல் தொழில்நுட்பப் பூங்கா யாழ். செயலகப் பொறுப்பில்

யாழ்ப்பாணம்,மார்ச்3

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்காவை யாழ். செயலகம் பொறுப்பேற்றுள்ளது.

ஸ்ரான்லி வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பூங்கா அரச நிறுவனமாகச் செயற்பட்டது.

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை செயலிழந்ததுடன் இந்தப் பூங்காவை நடத்துவதற்கான உதவிகளும் நிறுத்தப்பட்டன.

அரச உதவிகள் கிடைக்காததால், இந்த நிறுவனம் நடத்தும் கற்கை நெறிகள் மூலம் கிட்டும் நிதி மூலமே பணிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். செயலகத்தின் மேற்பார்வையில் இந்த நிறுவனம் தற்சமயம் செயற்படுகின்றது. இந்த நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கான சான்றிதழ்கள் யாழ். அரச அதிபரால் வழங்கப்படுகின்றன. (ம-3)

# சகல வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு; மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை

## தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் கோரிக்கை

கொழும்பு,மார்ச்3

சகல வேட்பாளர்களுக்கும் போதிய பாதுகாப்பு வழங்கவும் பொது மக்களின் வாக்களிப்பு உரிமையைப் பாதுகாப்பான சூழலில் பயன்படுத்தவும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்திருக்கும் இந்நிலையம், வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பைச் சுட்டிக் காட்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.மு. வேட்பாளர் சுந்தரம்பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து கவலை தெரிவித்திருக்கும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், வன்முறைகளற்ற தேர்தலை நடத்தக் கடமைப்பட்டுள்ள பொலீஸ்மா அதிகாரிகளாலும் ஏனைய பொலீஸ் அதிகாரிகளாலும் உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருப்பதற்கு மத்தியில், மட்டக்களப்பு வைத்தியசாலையில் சுந்தரம்பிள்ளைக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறது.

விடுதலைப் புலிகளே இத்தாக்குதலுக்கு காரணமென காத்தான்குடி பொலீஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகளுடன் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தொடர்புகொண்டு பேசிய போது புலிகள் அதனை மறுத்தனர் எனவும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. (க)

# காணாமற் போனோர் சங்கத்தின் மறியல் போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் சங்கத்தினர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக 3 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 2 நாள்களாக நடத்தி வந்த மறியல் போராட்டத்தை நேற்றுத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் சங்கமும் அன்னையர் முன்னணியும் இணைந்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் அதன் அதிகார வரம்புகள் என்பன தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பேராசிரியர் விளக்கமளித்தார்.

இதனையடுத்தே போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடத் தீர்மானிக்கப்பட்டது என்றும் -

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்றும் -

அன்னையர் முன்னணித் தலைவி செ.கனகாம்பிகை தெரிவித்தார். (ஒ-9-7-5)

# 'பவ்ரல்' அமைப்பின் பிரதிநிதிகளுடன் கூட்டமைப்பு வேட்பாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்3

தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் 'பவ்ரல்' அமைப்பின் பிரதிநிதிகள் இருவர் தமிழ்க்கூட்டமைப்பு வேட்பாளர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்.மாட்டின் வீதியில் அமைந்துள்ள தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் செயலகத்தில் நேற்றுப்பிற்பகல் 2.30மணிக்கு இச்சந்திப்பு இடம்பெற்றது. கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் ம.க.ஈழவேந்தன் ஆகியோர் இந்தச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் சுதந்திரமான, நியாயமான தேர்தல் இடம்பெற தமிழ்க் கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்று அவர்கள் அப்போது 'பவ்ரல்' அமைப்பின் பிரதிநிதிகளிடம் உறுதி வழங்கினர். யாழ்.தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட கிளிநொச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பது அவர்களின் அடிப்படை உரிமையாகும். அவர்கள் வாக்களிக்க வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படமாட்டா என்று ஜனாதிபதி கூறுகிறார். இது அந்த மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று கூட்டமைப்பினர் இச்சந்திப்பில் எடுத்துக்கூறினர். அத்துடன் குடாநாட்டில் இராணுவம் மற்றும் பொலீஸ் பாதுகாப்புடன் ஈ.பி.டி.பி.அமைப்பினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவது மககளை அச்சுறுத்தும் நடவடிக்கை என்று தாம் கருதுகிறார்கள் எனவும் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.(ஒ-3)

## வேலைநிறுத்தம் தொடர்கிறது!

தமக்கான கொடுப்பனவு நிலுவைகளை வழங்கிக் கோரித் திக்கம் வடிசாலைப் பணியாளர்கள் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள ஊழியர்களுடன் பனை அபிவிருத்திச் சபை அதிகாரிகள் நேற்றும் பேச்சு நடத்தினர். எனினும் இப்பேச்சில் சுமுகமான முடிவுகள் எட்டப்படாததால் வேலைநிறுத்தம் இன்றும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-70)

# திகாமடுல்ல 'சுயேச்சைக் குழு-15' வாபஸ் பெறப்போவதாக அறிவிப்பு

## மு.காவை ஆதரிப்போம் என்கிறார் முதல் வேட்பாளர்

அக்கரைப்பற்று,மார்ச்3

திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடும் 'சுயேச்சைக்குழு - 15' போட்டியிலிருந்து வாபஸ்பெறப் போவதாக அறிவித்துள்ளது. அந்த அணியைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ"க்கு ஆதரவு வழங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சுயேச்சைக் குழுவின் தலைமை வேட்பாளர் எம்.எஸ்.கலீல் இது தொடர்பாகத் தகவல் தெரிவிக்கையில் - முஸ்லிம் சமூகம் இன்று எதிர்நோக்கியுள்ள சவாலுக்கு முகம் கொடுக்கும் நோக்கமாகவும் எமது மக்களின் அரசியல் உரிமை விழலுக்கு இறைத்த நீராகிவிடக் கூடாது என்பதற்காகவும் முஸ்லிம் சமூகம் கடந்த காலங்களில் இந்த மாவட்டத்தில் தக்க வைத்திருந்த மூன்று ஆசனங்களையும் தொடர்ந்து தக்க வைக்கவேண்டும் என்பதற்காகவுமே போட்டியிலிருந்து விலகி முஸ்லிம் காங்கிரஸ"க்கு ஆதரவு வழங்கவிருக்கின்றோம் எனக் கூறினார். (க)



இந்தியாவின் அஹமதாபாத் அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர் பாதம்சிங் ஜூ வன்சிங் குர்ஜர் (வயது 60) இவர் கடந்த 22 ஆண்டுகளாகத் தனது மீசையை வெட்டவே இல்லை. முறுக்கி விட்டு வளர்த்தார். இவரின் மீசை இப்போது 12 அடி 5 அங்குலமாக வளர்ந்துள்ளது.

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறும் முயற்சியாக குர்ஜர் தனது மீசையை அஹமதாபாத்தில் நேற்றுமுன்தினம் காட்சிப்படுத்தினார். (ஒ)

# துப்பாக்கி முனையில் கொள்ளை: முதலாம் எதிரிக்கு 7 வருடக் கடூழியம்!

## 21 ஆண்டுகளின் பின்னர் தீர்ப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்3

1983ஆம் பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் துப்பாக்கி முனையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் குறித்த வழக்கில் முதலாம் எதிரிக்கு ஏழு வருட கடூழியச் சிறைத் தண்டனையை யாழ்மேல் நீதிமன்றம் நேற்று விதித்தது.

1983ஆம் ஆண்டு ஜனவரிமாதம் பருத்தித்துறையில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் 220 ரூபா ரொக்கப் பணத்தை துப்பாக்கிமுனையில் கொள்ளையடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் திருநாவுக்கரசு ரஞ்சன், வேலாயுதம் செல்வரத்தினம் ஆகியோருக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கில் இந்தச் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர். இதனால் அவர்கள் இல்லாது விசாரணை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. எஸ்.வரதராஜா முன்னிலையில் நேற்று நடைபெற்றது. முதலாம் சந்தேக நபரான திருநாவுக்கரசு ரஞ்சனை குற்றவாளியாகக்கண்ட நீதிபதி அவருக்கு 7 வருடக்கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையால் இரண்டாவது சந்தேக நபரான வேலாயுதம் செல்வரத்தினம் விடுதலை செய்யப்பட்டார். மேலும் தண்டனை விதிக்கப்பட்டவருக்கு எதிராக நீதிமன்றம் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. நாட்டுச் சூழ்நிலை காரணமாக நீதிமன்ற அமர்வுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமையால் இவ்வழக்கு விசாரணை மீண்டும் இயங்கிய யாழ் மேல்நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## நேற்று முதல் மீண்டும் வடமராட்சி மீனவர் கடலுக்குச் சென்றனர்

யாழ்ப்பாணம்,மார்ச்3

வடமராட்சிப் பிரதேசக் கடற்றொழிலாளர்கள் ஒரு வார காலத்தின் பின்னர் நேற்று கடலுக்குச் சென்றனர்.

கடந்த 23 ஆம் திகதி இன்பருட்டிக் கடற்பரப்பில் வைத்து வடமராட்சிக் கடற்றொழிலாளர்கள் மூவர் தமிழக மீனவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகினர். அவர்களில் ஒருவர் பின்னா சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்துக் கடலுக்குச் செல்லாதிருந்த வடமராட்சிக் கடற்றொழிலாளர்கள், நேற்றிரவு கடலுக்குச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பகல் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாசத்தினருக்கும் இடையே நடந்த பேச்சின் பின்னரே கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஒ-10)

# செஞ்சிலுவைச் சங்கக் குழுவுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்3

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு பின்வருவோர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கஸ்பர் வில்பேட் (பூங்காதி, குருநகர்), கணேசன் புனிதவதி (மணிப்புரி, கொழும்புத்துறை), ம. நிலுக்ஷி (7ஆம் கட்டை, மல்லாகம்), ரட்ணானந்தன் பவளக்கொடி (தெல்லிப்பழை), கிட்டினன் விமலராசா (வளலாய் மேற்கு) -

பாலராசா இவோனி (சாவகச்சேரி), எனோக் மெற்றில்டா (பெரியவிளான்), துரைராசலிங்கம் சந்திரலீலா (ரயில் நிலைய வீதி, மல்லாகம்), ஜெயக்குமார் செல்வலட்சுமி (சுழிபுரம் மத்தி), க.பிரான்சிஸ் (டச்சு வீதி, உடுவில்), சதாசிவம் அங்கயற்கண்ணி (உரும்பிராய் தெற்கு) -

குலசேகரம்பிள்ளை ராசமலர் (சுழிபுரம்), சங்கரப்பிள்ளை லட்சுமி (கட்டுடை, மானிப்பாய்), வேலுப்பிள்ளை ராஜேஸ்வரி (கஸ்தூரியார் வீதி, யாழ்), கமலாதேவி நாகரத்தினம் (கமால் வீதி, யாழ்.) க.ரகுபதி (ஊரெழு) -

தேவராசா முத்துலட்சுமி (அல்லைப்பிட்டி), திருமேனிப்பிள்ளை மாணிக்கரத்தினம் (ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை), ருசீந்திரம் ஜெயலட்சுமி (தேனியம்மை வீதி, வல்வெட்டித்துறை), பழனியாண்டி பாலேஸ்வரன் (புதுவீதி, வல்வெட்டித்துறை), வரப் பிரகாசம் மேரி மெடலீன் (புனித தோம் பையப்பர் வீதி, பருத்தித்துறை) -

செபமாலை மாகிறட் (பதுவளை பொலிகண்டி), அருளானந்தன் லூர்த்தம்மா (பீச் றோட், குருநகர்), ரத்தினம் கணேசமூர்த்தி (முகமாலை தெற்கு), ம.ஸ்ரான்லி (கிளாலி), செல்லக்குட்டி ஜசிந்தவநாதன் (எழுதுமட்டுவாள் வடக்கு) -

அருளானந்தராசா பத்மராணி (நாகர்கோவில் கிழக்கு), தம்பாப்பிள்ளை செல்வரத்தினம் (தும்பளை), சூசைதாசன் லீலாவதி (உசன்), ஆனந்தம் விமலேஸ்வரி (தும்பளை).

# பேராதனை பொறியியல் பீடத்தின் பரீட்சை முடிவை வெளியிடத்தடை!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்தது

யாழ்ப்பாணம்,மார்ச்3

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட இறுதிப் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை இடைக்காலத் தடையைப் பிறப்பித்தது.

அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல்பீட அக்பர் மண்டபத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 'பகிடிவதை' சம்பவம் மற்றும் அது தொடர்பில் விரிவுரையாளர்கள் சிலரைத் தடுத்து வைத்திருந்தமை என்பவற்றுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்து 17 மாணவர்களை பல்கலைக்கழக செயற்பாடுகளில் இருந்து நிர்வாகம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது.

குறிப்பிட்ட 17 மாணவர்களும் தமது இடைநிறுத்தத்தை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்த மனுமீதான விசாரணையிலேயே மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி இடைக்காலத்தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேற்படி மனுவில் பிரதிவாதிகளாக பேராதனைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் 16 உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி, நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்றும் -

இடைநிறுத்தப்பட்ட பொறியியல் பீடமாணவர்களில் 7 பேரை நடைபெறும் இறுதி வருடப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்க வேண்டும் என்றும் - நீதிமன்றம் பணித்துள்ளது.

பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் இருந்து மாணவர்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாகத் துணைவேந்தர் அறிவித்தமை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குத் தடை உத்தரவையும் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. (ஒ-9)

### ஈராக் மீண்டும் அதிர்ந்தது

# புனித யாத்திரையில் குண்டு வெடிப்பு

# 100 யாத்திரிகர்கள் உடல் சிதறிப் பலி!

## நூற்றுக்கணக்கானவர்கள் காயம்; பக்தாத், கார்பலா நகர்களில் பதற்றம்

பக்தாத்,மார்ச்3

**ஷியா முஸ்லிம்களின் புனித நாள்களில் ஒன்றான நேற்றைய தினம் ஈராக்கிய தலைநகர் பக்தாத்திலும் கார்பலாவிலும் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களில் 100பேர் வரையிலானோர் உயிரிழந்தனர். கார்பலாவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 75 பேர்வரையிலானோர் உயிரிழந்தனர். மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். பக்தாத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர்; நூறு பேர் வரையிலானோர் காயமடைந்தனர். இரு தாக்குதல்களும் நன்கு திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டே நடத்தப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.**


இந்தத் தாக்குதலால் கார்பலாவில் பெரும் பதற்றம் உருவாகி உள்ளதாகவும் மக்கள் உச்சப் பயத்தில் உள்ளனர் என்றும் அங்குள்ள பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.


அஷூரா புனித தினத்தில் ஷியா இன முஸ்லிம்கள் சென்றுகொண்டிருந்த ஊர்வலங்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. ஊர்வலம் மீது தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாக பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. அதனையும் மீறியே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஈராக்கின் பெரும்பான்மையினரான ஷியா முஸ்லிம்கள் சுதந்திரமாக தமது மதக் கொண்டாட்டங்களை நடத்துவது இதுவே முதற்றடவையாகும். சதாம் ஆட்சிக் காலத்தில் இத்தகைய ஊர்வலங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

கார்பலாவில் இடம்பெற்ற மத ஊர்வலத்தில் 10 லட்சத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்டிருந்தனர்.

கார்பலாவில் மட்டும் 6 குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன என்று கூறப்படுகின்றது. குண்டுகள் வெடித்த ஒரு மணி நேரத்தில் அங்குள்ள மசூதி இரத்ததானம் செய்யக்கோரி ஒலிபெருக்கியில் தொடர்ந்து அறிவித்த வண்ணம் இருந்தது.





"நாங்கள் மசூதி அருகே நின்றிருந்தோம். அப்போது வெடிச்சத்தம் கேட்டது. நாங்கள் பெரும் வெளிச்சம் ஒன்றைப் பார்த்தோம். கைகள், கால்கள் சிதறிப் பறக்க பெரும் வெளிச்சம் தொடர்ந்து தெரித்தன. அடுத்து அம்புலன்ஸ்கள் அங்கு விரைந்து வந்தன" - என்று தெரிவித்தான் சம்பவத்தை நேரில் கண்ட 18 வயது இளைஞன் ஒருவன்.

குண்டுத் தாக்குதல்கள் எப்படி இடம்பெற்றன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. தற்கொலைத் தாக்குதல்களா? வாகனங்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்தனவா? ஏற்கனவே அந்த இடங்களில் மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்தனவா என்று தெரியாத நிலையில் அதிகாரிகள் குழம்பிப் போயுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டு வெடித்ததும் ஆத்திரம் கொண்ட சிலர் அங்கிருந்த வெளியார்களைத் தாக்கியுள்ளனர். இத்தாலி நாட்டு செய்திப் படப்பிடிப்பாளர் ஒருவரும் ஈரானியர் ஒருவரும் இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

கார்பலாவில் குண்டுகள் வெடித்த அதேசமயத்தில் வடமேற்கு பக்தாத்தில் குறைந்தது நான்கு குண்டுகள் வெடித்தன என்று ஈராக்கியப் பொலீஸார் தெரிவித்தனர். பக்தர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

அடையாளம் காணப்படாத இடம் ஒன்றில் இருந்து பிரார்த்தனை இடம்பெற்றுக்கொண்டிருந்த மசூதி நோக்கி நான்கு மோட்டார் குண்டுகள் ஏவப்பட்டுள்ளன என்று அங்குள்ள அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர். (ம)

# சதிசெய்து அரிஸ்டிட்டை விரட்டியது அமெரிக்கா!

## அவரே குற்றம் சுமத்துகின்றார்

லண்டன்,மார்ச்3

"அமெரிக்கா பலவந்தப்படுத்தி என்னை எனது நாட்டை விட்டு வெளியேற்றியது. அமெரிக்காவின் சதிக்கு நான்ஆளாகி, இந்த நிலைக்குத் தள்ளப்பட்டேன்"

- இப்படிக் குற்றஞ் சுமத்தியிருக்கிறார் ஹெய்ட்டியில் கடந்த ஞாயிறன்று அதிபர் பதவியைத் துறந்து, நாட்டைவிட்டு வெளியெறிய ஜேன் பேட்ரண்ட் அரிஸ்டிட்.

தற்போது மத்திய ஆபிரிக்க குடியரசில் தனது மனைவியோடும் பிள்ளைகளோடும் தஞ்சம் புகுந்திருக்கும் அரிஸ்டிட் அமெரிக்கத் தொலைக்காட்சிச் செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்தார்.

அமெரிக்க ஏஜெண்டுகளின் நிபந்தனைக்கு இணங்கி பதவியைத் தாம் துறக்க வேண்டி ஏற்பட்டதாகவும், அப்படித் தாம் செய்யாவிட்டால் தலைநகர் போர்ட்-ஒவ் பிரின்ஸில் பெரும் வன்முறைகள் வெடிக்கும் என்று அமெரிக்க ஏஜெண்டுகள் மிரட்டினார்கள் என்றும் -

அதனால் வேறு வழியின்றி நாட்டினதும் மக்களினதும் நன்மை மற்றும் பாதுகாப்புக் கருதி தாம் பதவி துறக்க இணங்கினார் என்றும்-

அந்தப் பேட்டியில் அரிஸ்டிட் கூறியிருக்கின்றார்.

ஹெய்ட்டியிலிருந்து அவர் அமெரிக்க ஏஜெண்டுகளால் பலவந்தமாகக் கடத்திவரப்பட்டாரா என்ற கேள்விக்கு நேரடியாகப் பதில் அளிப்பதை அவர் தவிர்த்துக்கொண்டார்.

முன்னதாக, முன்னாள் அதிபர் அரிஸ்டிட் அமெரிக்க ஏஜெண்டுகளால் நாட்டிலிருந்து கடத்தப்பட்டார் என அரிஸ்டிட்டின் நண்பர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டு "ஆதாரமற்றது" நகைப்புக்கிடமானது"- என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுகிழமை தலைநகர் போர்ட்-ஒவ் பிரின்ஸின் விமான நிலையத்தில வந்திறங்கிய அமெரிக்க ஜெட் விமானத்தில் அரிஸ்ட்டிட்டும் அவரது குடும்பத்தவர்களுமள

உலக அரங்கில்

அவசர அவசரமாக ஏற்றி அனுப்பிவைக் கப்பட்டனர்.

அச்சமயத்தில் அமெரிக்காவின் ஆறு பாதுகாப்புப் படையினர் அரிஸ்டிட் குடும்பத்தவர்களோடு உடன் இருந்தனர் என்று குறிப்பிட்ட அங்குளள அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தலைவர் லூயில் மொரனோ, ஜனாதிபதியை வெளியேறும்படி யாரும் கட்டாயப்படுத்தவில்லை என்றார்.

"எந்தச் சமயத்திலும் யாரும் அவரைப் பலவந்தப்படுத்தவோ, வற்புறுத்தவோ இல்லை. யாவும் மிகவும் அந்நியோன்னியமாகவும், சுமூகமாகவும் நடந்தேறின" - என்றார் அவர்.

இதற்கிடையில் -

சி.என்.என். தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த அரிஸ்டிட், ஞாயிற்றுக்கிழமை தாம் தலைநகரில் ஜனாதிபதி மாளிகையில் இருந்த சமயம் அமெரிக்க ஏஜெண்டுகள் தம்மிடம் வந்தனர் என்று கூறினார்.

அதன் பின்னர் தாம் கடத்தப்பட்டார் என்று திட்டவட்டமாக அரிஸ்டிட் கூறாவிட்டாலும் அவர்கள் கோரிய விடயத்தைத் தான் நிறைவேற்றாவிட்டால் வன்முறை வெடிக்கும் என அச்சுறுத்தப்பட்டதால் வேறு வழியின்றி தமது இராஜினாமாத் தொடர்பான ஆவணங்களில் தாம் கையெழுத்திட்டார் என்று குறிப்பிட்டார்.

"பெரும் இரத்தக்களரி ஏற்படும் என்பதை இறுதியாக நானும் உணர்ந்துகொண்டேன்" - என்றார் அவர்.

"வன்முறை வெடித்தால் எவ்வளவு மக்கள் கொல்லப்படுவார்கள் என்று நான் கேட்டேன் அவர்கள் ஆயிரம் பேர்வரை கொல்லப்படலாம் என்றனர்" - எனவும் அரிஸ்டிட் சொன்னார்.

இதற்கிடையில், இவ்விவகாரம் குறித்து கருத்துத் வெளியிட்ட அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல்" அவர் கடத்தப்படவில்லை அவரை விமானத்தில் ஏறும்படி நாங்கள் கட்டாயப்படுத்தவுமில்லை. அவர் விரும்பியே விமானத்துக்குச் சென்றார். அதுதான் உண்மை" - என்று கூறுகிறார்.

### பத்திரிகை நிருபர் சுட்டுக்கொலை!

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம் சிவபுரி அருகே உள்ள குட்வாரா என்ற கிராமத்தில் திருமண விழாவில் பங்கேற்ற பத்திரிகை நிருபர் தினேஷ் பார்கல் (வயது 27) என்பவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மணமகன் அருண், மண விழாவைக் கொண்டாடும் குதூகலத்தில் தன்னிடமிருந்த நாட்டுத் துப்பாக்கியால் சுட்டார் எனவும் தவறுதலாகக் குண்டு பாய்ந்து தினேஷ் இறந்தார் எனவும் கூறப்படுகிறது.

தினேஷ் குவாலியாரிலிருந்து வெளியாகும் தினசரிப் பத்திரிகையில் நிருபராகப் பணியாற்றிவந்தார்.

### சென்னையில் விபத்தில் சிக்கிய ஆஸி.ஜோடி:

# காதலி உயிர்பிரிய முன் தாலிகட்டிய காதலன்!

## வைத்தியசாலைப் படுக்கையில் உருக்கமான காட்சி!!

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த காதல் ஜோடி தமிழர் கலாசாரப்படி திருமணம் செய்ய சென்னைக்கு வந்தபோது விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தது.

வைத்தியசாலையில் காதலியின் உயிர் பிரியும் முன்பு காதலன் தாலி கட்டினார்.

நெஞ்சை உருக்கும் இந்தச் சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:-

ஆஸ்திரேலிய நாட்டிலுள்ள பிரிஸ்பேர்ன் நகரைச் சேர்ந்த பெண் மனோதத்துவ நிபுணர் டெரி மெரிக் (வயது 36), இதேபகுதியைச் சேர்ந்தவர் ஸ்ருவார்ட் ஜேம்ஸ்(வயது 56) இவர் போதைப் பொருள் தடுப்புத் தொடர்பான ஆராய்ச்சியாளர்.

ஆஸ்திரேலியாவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் ஸ்ருவார்ட் ஜேம்ஸ் வேலை பார்க்கிறார். அங்கு டெரிமெரிக் படிக்கச் சென்றபோது அவருக்கும் ஜேம்ஸுக்கும் இடையே காதல் மலர்ந்தது.

18 ஆண்டுகளாக இருவரும் காதலித்து வந்தனர். இந்நிலையில் தமிழ் நாட்டின் கலாசாரத்தைப் பற்றி இருவரும் கேள்விப்பட்டனர். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற தமிழர் பண்பாடு காதலர்கள் மனதைக் கவர்ந்தது.

இதனால், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இந்த காதல் ஜோடி தமிழ் நாட்டுக்கு வந்து தமிழர்களின் வழக்கப்படி திருமணம் செய்துகொள்ள முடிவுசெய்தது. அதற்காக ஆஸ்திரேலியாவில் இருந்து புறப்பட்டு இருவரும் கடந்த 6 ஆம் திகதி தமிழ் நாட்டுக்கு வந்தனர்.

புதுச்சேரி, கோயம்புத்தூர், மேட்டுப்பாளயம் உட்பட பல்வேறு சுற்றுலா மையங்களுக்குச் சென்று சுற்றிப்பார்த்தனர். அவர்கள் சென்னை கீழ்ப்பாகத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தனர்.

பின்பு மகாபலிபுரத்துக்குச் சென்று திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தார்கள். அதன்படி கடந்த 25 ஆம் திகதி ஒரு மோட்டார் சைக்கிளில் 2 பேரும் மகாபலிபுரத்துக்குப் புறப்பட்டனர்.

சென்னை பாரிமுனையில் உள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையும், ராஜாஜி சாலையும் சந்திக்கும் இடத்தில் சென்றபோது, வேகமாக வந்த டிப்பர் லொரி மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதில் காதலர்கள் இருவரும் தூக்கி வீசப்பட்டனர்.

காதலி டெரிமெரிக்குக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. ஸ்ருவார்ட் ஜேம்ஸுக்கு கையில் காயம் ஏறபட்டது உடனடியாக அவர்களை கீழ்ப்பாகத்திலுள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அங்கு இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. டெரிமெரிக் சுயநினைவு இல்லாமல் இருந்தார். அவர் உயிர்பிழைப்பது கடினம் என்பதை ஸ்ருவார்ட் ஜேம்ஸ் தெரிந்து கொண்டார்.

இதனால் தமிழர்களின் முறைப்படி திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறாமல் போய்விடக் கூடாதே என ஜேம்ஸ் கவலைப்பட்டார். வைத்தியசாலையில் வைத்தே திருமணம் செய்து கொள்ள ஜேம்ஸ் முடிவுசெய்தார்.

ஜேம்ஸ் தனது விருப்பத்தை டாக்டர்களிடம் தெரிவித்தார். உடனே கடந்த 28ஆம் திகதி அவர்கள் புரோகிதரை அழைத்து வந்தனர். புரோகிதர் மந்திரம் ஓத, மஞ்சள் கோர்க்கப்பட்ட தாலியை ஜேம்ஸ் தனது காதலிக்குக் கட்டினார்.

தனது 18 ஆண்டுகால விருப்பத்தை சுயநினைவு இல்லாத நிலையில் நிறைவேற்றிக்கொண்ட டெரி மெரிக், சுயநினைவு திரும்பாமல் அன்றே உயிரிழந்தார். (க)

## ஓவ்செற் இயந்திர இயக்குநர் பயிற்சியாளர்

**ஓவ்செற் இயந்திர இயக்குநர் பயிற்சியாளர்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**18 முதல் 30 வயது எல்லைக்குட்பட்டவர்களாகவும் கல்விப் பொதுத் தராதரச் சாதாரணதரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களாகவும் இருக்கவேண்டும்.**

**இயந்திர வேலைகளில் ஆர்வமும் ஈடுபாடும் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**கல்விச் சான்றிதழ்களுடனும் உறவினர் அல்லாத இருவரிடம் இருந்து அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்கவும்.**

**விண்ணப்ப இறுதிநாள்: 10.03.2004**
**உதயன் மனிதவள சேவை,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்கள்

## இராஜநாயகம் சக்திகுமார் (டோனி)

தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.54 A, எலிலேன், கொழும்பு-15ஐ வதிவிடமாகவும் கொண்ட இத்தாலியில் வசித்து வந்தவரான இராஜநாயகம் சக்திகுமார் (டோனி) அவர்கள் 28.02.2004 சனிக்கிழமை இத்தாலியில் அகால மரணமானார்.

அன்னார் இராஜநாயகம் - தங்கபூபதி (தேவி-தாய்) தம்பதிகளின் அன்பு மகனும் தேவகுமார் (கனடா) - திருமதி சு.ஞானகோபால் (சாந்தி ரீச்சர், யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்) இ.அபயகுமார் (ரவி-எகிப்து) ஆகியோரின் அருமைச் சகோதரரும் திருமதி ச.கிருசாந்தி அவர்களின் அன்புக் கணவரும் திருமதி தே.மாலினி (கனடா), திரு.இ.ஞானகோபால் (லங்கா சிமெந்து நிறுவனம், இணுவில்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கே.பிரசாந்தின் அன்புச் சித்தப்பாவும் ஞா.ஹஜரூபா (யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), ஞா.பஜனீதா (யா/புனித ஜோண பொஸ்கோ) ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல.54 A, எலிலேன், கொழும்பு-15 இலுள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (03.03.2004) புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் இறுதிக்கிரியைகளின் பின்னர் மாதம்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி த.இராசநாயகம் (தாய்)
மனைவி, சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்.

*54A, எலிலேன்,*
*கொழும்பு-15,*
*T.P.: 5358596* (29172) (12-19-24)

## இராயப்பு பிலிப்பு (செல்லத்தம்பி)



பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியைச் சேர்ந்தவரும் முன்னாள் கணக்குப் பொறுப்பாளரும் காலஞ்சென்ற மேரி திரேசாவின் அன்புக் கணவரும் ஆகிய இராயப்பு பிலிப்பு (செல்லத்தம்பி) அவர்கள் 29.03.2004 ஞாயிறு அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அக்கினேஸ் மற்றும் சிசிலியா, திருச்செல்வநாயகி மெற்றில்டா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தோமஸ் அல்பிறட் மற்றும் மரியானந்த தேவராஜா (சுவிஸ்), மரியகொறற்றி மேரிறோஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி (லண்டன்), செபமாலைமுத்து (நிறோசி ரவல்ஸ்), சந்தானநாயகி (சுவிஸ்) கணேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீபாஸ்கரன் (பிரான்ஸ்), றூபன் (கனடா), கிறிஸ்ரி (லண்டன்), அமலி (டென்மார்க்), றொசாணியா (லண்டன்), இதயன் (ஹொலன்ட்), ஜெனதன் (ஹொலன்ட்), கில்லா (சுவிஸ்), பிறேம்குமார் (கனடா), றெஜி, நிஷா (ஹொலன்ட்), தர்ஷிகா, நிறோஷிகா, கிறிஷாந்தி (சுவிஸ்), நிறோஷாந்தி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (04.03.2004) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் பூசை பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அற்பதர் அரங்கில் இரங்கல் உரையின் பின் கோரியடி சேமக்காலையில் நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4ஆம் குறுக்குத்தெரு,*
*பருத்தித்துறை.*
(29181) (24-12-19)

தகவல்:
ச.செபமாலைமுத்து
(சந்திரன் - மருமகன்)

## மயில்வாகனம் மோகனதாஸ்

(சுந்தரம் பிறதர்ஸ், மணல்தறை)



மயில்வாகனம் மோகனதாஸ் அவர்கள் 02.03.2004 அன்று காலமானார்.

அன்னார் கந்தர்மடம், மணல்தறை லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நா.மயில்வாகனம் (காந்தியர்) - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (சுந்தரம் பிறதர்ஸ்), சோபனாம்பாள் மற்றும் பார்வதாதேவி, சரஸ்வதி (ஆஸ்திரேலியா), சுபத்திராதேவி (கனடா), Dr.கிருஸ்ணதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பூமாதேவியின் அன்புக் கணவரும் ரமணி, (நோர்வே), கலா, காலஞ்சென்றவர்களான பாலகுமார், சற்குரு ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரின்பசிவம் (நோர்வே), உருத்திரானந்தா (குளோபல் காட்வெயர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருந்தன், அகஸ்தியா, அகஸ்தியன் (நோர்வே), பிரவீன், சதானந்தா, பிரவாணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*49/2, மணல்தறை லேன்,*
*கந்தர்மடம்.*
(29174) (39-24-12-19)

தகவல்:
M.உருத்திரானந்தா (மருமகன்)
(குளோபல் ஹாட்வெயர்ஸ்).

## பொதுத் தேர்தல் கண்ணோட்டம் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்3

'பொதுத் தேர்தல் 2004 ஒரு கண்ணோட்டம்' என்ற கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணிவரை யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறைப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கருத்துரையை வழங்கவுள்ளார். (ம-7)

## மழை இன்மையால் சிறுதானியச் செய்கையும் பாதிப்பு

வட்டுக்கோட்டை,மார்ச்3

வலிகாமம் மேற்குப் பிரதேச நெற் காணிகளில் போதிய ஈரலிப்பு இன்மையால் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாதுள்ளதாக அப்பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் போதிய மழையின்மையால் நெற்செய்கையில் நஷ்டமடைந்த விவசாயிகள் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட முனைந்தபோதும் போதிய ஈரலிப்பு இன்மையால் அதுவும் கைகூடவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

இதனால் அராலி, வட்டுக்கோட்டை, அரசடி, சங்கரத்தை, நவாலி, சுழிபுரம் மற்றும் சங்கானைப் பகுதி விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். (ம-10-161)

## நிறைநிலா கவிதைத் திருவிழா

நல்லை சங்கிலி அரசன் சனசமூக நிலைய நல்லைத்தமிழ்ச் சங்கம் நடத்தும் 'நிலவிலே பாடுவோம்' முதலாவது நிறைநிலா கவிதைத் திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4மணிக்கு நல்லை அமிழ்தன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை சிவஸ்ரீ செள.குமாரக்குருக்கள், யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், க.துரைராஜா, கோ.ஜெயந்திரா, த.நாகராசா, புலவர் செ.து.தெட்சணா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடக்கவுரையை யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன் நிகழ்த்துவார். (ம-10-7)

## விளக்கமறியல்

ஏழாலை கிழக்கில் கடந்த சனிக்கிழமை குடும்பப்பெண் ஒருவரை மோதிவிட்டுத் தப்பியோடிய உழவு இயந்திரச் சாரதியை இருவாரம் விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த தவஞானவதி பாலசுப்பிரமணியம் என்பவரை உழவுஇயந்திரத்தால் மோதிவிட்டுத் தப்பியோடினார் என்று கருதப்படும் எஸ்.விஜயகுமார் என்ற சாரதி சுன்னாகம் பொலீஸில் சரண் அடைந்திருந்தார்.

பிரஸ்தாப நபரை மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சுன்னாகம் பொலீஸார் ஆஜர்செய்தனர்.

இவரைப் பிணையில் விடுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்த நீதிவான் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார் (ம-3)

## பணம் அபகரிப்பு

ஊர்காவற்றுறை,மார்ச்3

அண்மையில் யாழ். பஸ் நிலையத்திலிருந்து கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறை நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணஞ்செய்த பெண் ஒருவருடைய பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

எழுவைதீவைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அருள்மலர் என்பவரே இவ்வாறு பணத்தைப் பறிகொடுத்தவராவார். இவர் தனது கைக குழந்தையுடன் பஸ்ஸில் பயணஞ் செய்ததாகவும் கரம்பன் கண்ணகை அம்மன் இறங்கு துறையில் பஸ்ஸை விட்டு இறங்கியபோது தனது கைப் பையில் இருந்த பணம் அபகரிக்கப் பட்டிருப்பதை அறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-16)

## உடன் தேவை

**வைத்திய கலாநிதி அல்லது பதிவு வைத்திய அதிகாரி (பதில் கடமைக்காகத் தேவைப்படுகின்றார்) உடன் தேவை.**

தொடர்புகளுக்கு:
**பணிப்பாளர்,**
**சென்றல் நேர்ஸிங் ஹோம்**
***இல. 350. பலாலி வீதி. யாழ்ப்பாணம்.***
(29184) (26-24-39-18)

## 8ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



| அன்னை மடியில் | தெய்வ அடியில் |
|---|---|
| 01 - 07 - 1979 | 03 - 03 - 1996 |

### செல்வன் மகேந்திரன் பிரேமானந்

*எட்டாண்டுகள் மறைந்தாலும் எம்செல்வத்தை மறக்கமுடியுமா?*
*கண்ணீரின் கோலங்கள் தான் காலத்தின் தீர்ப்போ என்று*
*கதிகலங்கி நிற்கின்றோம்; மனம் வெதும்பி நிற்கின்றோம்*
*ஆறுதல் யார் தருவர் உங்கள் நினைவைத்தான் யார்மாற்றுவார்?*
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

இல. 26/2A, 3ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (29156) (26-12-19-24)

*நீங்காத நினைவுடன:*
**- குடும்பத்தினர்.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| அவனியில் | அவனிடம் |
|---|---|
| 16 - 08 - 1951 | 19 - 01 - 2004 |

மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும்
உடுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட


### அமரர் தம்பியப்பா தர்மலிங்கம் (அதிபர்)

இன்று (03.03.2004) புதன்கிழமை உடுவில் தெற்கு, யாமாச் சந்தியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்தியத்தில் பங்கேற்று ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

*யாமாச்சந்தி,*
*உடுவில் தெற்கு.*
(29178) (19-12-24)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1941 - 01 - 10 | 2002 - 02 - 21 |

வீமன்காமம். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் முத்தன் கந்தையா

(உரிமையாளர், காந்தன் சைக்கிள் வேக்ஸ்,திருநெல்வேலி)

**திதி:2004.03.03**

*பாரினிலே எம்மை அன்பு எனும் நீரூற்றி*
*ஆதரவு காட்டி அரவணைத்த அன்புத் தந்தையே!*
*அறிவுடை நற்பெட்டகமாய் அவனியிலே வாழ்ந்தவரே*
*தென்றலாய் வந்தெமக்குத் தெளிவாய் பதில் சொல்வாய்*
*தெய்வமே!*
*காலமெல்லாம் உங்கள் நினைவுகளுடன் வாழுகின்றோம்.*

நீங்காத நினைவுகளோடு:
**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள். பேரப்பிள்ளைகள்.**

*உரும்பிராய்.*
(29175) (12-19-24)

உதயன்

## முஸ்லிம்கள் விடயத்தில் ஜனாதிபதியின் போக்கு

அமைதிப் பேச்சுகள் மற்றும் சமாதான வழிமுறைகள் மூலம் மட்டுமே இனப்பிரச்சினைக்கு - நிரந்தரமான - நீடித்து நிற்கக்கூடிய ஒரு தீர்வைக் காணலாம் என்ற ஒரே நிலைப்பாட்டுக்குப் பெரும்பான்மைச் சிங்களவர்களின் பெரிய கட்சிகள் இரண்டும் வந்துவிட்டன.

இதனால், 'அமைதி', 'சமாதானம', 'பேச்சு', 'சமரச முயற்சிகள', 'இணக்கப்பாடு', 'கருத்தொற்றுமை', 'விட்டுக்கொடுப்பு'.... என்று பல்வேறு பழைய புதிய சொற்றொடர்கள் பலப்பலவும் தென்னிலங்கைத் தேர்தல் பிரசார மேடைகளில் பரவலாக எதிரொலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

சமாதானப் பேச்சு நடத்துவதற்கு தென்னிலங்கை மக்களிடம் 1994இல் ஆணைபெற்று ஆட்சியைப் பிடித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அதற்குப் பின்னர் போர்வெறிகொண்டு 'சமாதானத்துக்கான யுத்தம' என்ற ஒன்றைப் பிரகடனப்படுத்தினார்.

இப்போது தம்மைப் பெரும் அமைதி விரும்பியாகக் காட்டிக்கொண்டு சமாதான முயற்சிகளிலும் அமைதிப் பேச்சுகளிலும் தீவிரமுடையவர்போல வெளிப்படுத்திவருகின்றார்.

பிரதமர் ரணிலின் ஐ.தே.முன்னணி அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாக ஈழத்தமிழர்களோடு அமைதிப் பேச்சுக்களிலும், சமாதான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்த சமயம் அதைக் கடுமையாக விமர்சித்து, அந்த எத்தனங்கள் அனைத்தையும் குழப்பியடிப்பதற்குத் தன்னால் இயன்ற அனைத்தையும் சந்திரிகா செய்தார் என்பது உலகறிந்த இரகசியம்.

அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த அரசிடமிருந்து பாதுகாப்பு அமைச்சைப் பறித்ததும், நாடாளுமன்றத்தைக் கலைத்து அந்த அரசை வீட்டுக்கு அனுப்பியதும் இந்த வரிசையில் உச்ச நடவடிக்கைகள்.

ஐ.தே.க. அரசு - புலிகள் பேச்சு நடந்த சமயம், அப்பேச்சுக்களில் முஸ்லிம்களும் மூன்றாம் தரப்பாகச் சேர்க்கப்படவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்கள் காரணமாக அந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை.

ஏற்கனவே, இந்தச் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்குக் 'கறுவிக்' கொண்டிருந்த ஜனாதிபதிக்கு, முஸ்லிம்களின் மூன்றாம் தரப்புக் கோரிக்கை நல்ல வசதியான ஆயுதமாகிவிட்டது. ஏதோ தாம் மட்டுமே முஸ்லிம்களின் ஆபத்பாந்தவர் என்பது போலவும், ஐ.தே.க. அரசு முஸ்லிம்களைக் கைவிட்டுவிட்டது போன்றும் நீலிக் கண்ணீர் வடித்தார் அவர். முஸ்லிம்களைத் தவறாக வழிநடத்தி, அவர்களின் ஐக்கியத்தை உடைத்து, அணி பிரித்தார். அமைச்சர் ஹக்கீம் மீது தமக்கிருந்த வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளவும் அதனைத் தக்க வாய்ப்பாக்கிக் கொண்டார்.

தமது தலைமையில் அரசு, புலிகளோடு பேச்சு நடத்தும்போது, அதில் முஸ்லிம்களுக்கு மூன்றாம் தரப்பு, கட்டாயம் வழங்கப்படும் என்று பிரகடனப்படுத்தினார்.

ஆனால், தப்பித்தவறி அவரது அரசு ஆட்சிக்கு வந்து, புலிகளுடன் பேசவேண்டிய நிலைமை வரலாம் என்ற சூழ்நிலை நெருங்கும்போது அவர் இப்போது தட்டைமெல்லப் புரட்டிப் போடப் பார்க்கிறார். 'த ஹிந்து' நாளிதழுக்குத் தாம் வழங்கிய பேட்டியில் இவ்விடயம் குறித்து அவர் கூறுவது என்ன? அதைப் பார்த்தால் அவரது உள்நோக்கம் அம்பலமாகிவிடும்.

*"முக்கியமாக முஸ்லிம் தரப்பு உட்பட எல்லாத் தரப்பினரையும் பேச்சுக்களில் சேர்த்துக்கொள்வதற்கு புலிகளை இணங்கவைக்க நாம் முயற்சிப்போம். புலிகள் அதற்கு இணங்காவிட்டால், இந்தத் தரப்பினர்களோடு நாம் தனியாகப் பேசுவோம். புலிகளுடனான பேச்சில் என்ன நடக்கிறது என்று அத்தரப்பினருக்குத் தெரிவிப்பதன் மூலம் அவர்களையும் கலந்துரையாடல்களுக்குள் கொண்டுவருவோம"* - இதுதான் ஜனாதிபதியின் திட்டம். இப்படித்தான் அவர் கூறியிருக்கின்றார்.

அதாவது முஸ்லிம்களின் பிரதிநிதிகளைச் சமாதானப் பேச்சுக்களில் மூன்றாம் தரப்பாகச் சேர்ப்பதற்குப் புலிகள் இணங்காவிட்டால், முஸ்லிம்களோடு ஜனாதிபதி தனியாகப் பேசுவார். புலிகளோடு தாம் பேசும் விவரங்களை அப்போது அவர்களுக்குக் கூறுவார். - இதுதான் ஜனாதிபதியின் திட்டம் என்பது அம்பலமாகிவிட்டது.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு மூன்றாம் தரப்பு அந்தஸ்தை வழங்க முடியாவிட்டாலும், அரசுத் தரப்புக் குழுவில் முஸ்லிம்களின் தலைவர் ஒருவரை இடம்பெறச் செய்து, நேரடியாகச் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு இடமளித்த பிரதமர் ரணிலின் முன்மாதிரி இதைவிடப் பல மடங்கு மேலானதல்லவா?

இந்தத் தாற்பரியத்தை முஸ்லிம்கள் புரிந்துகொள்வது நல்லது.

தாம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பல்வேறு இனங்களின் நலன்களை அரசியல்வாதிகள் எப்படிப் பந்தாடுவர் என்பதற்கு இது நல்ல உதாரணமும் கூட. அவர்களின் முன்னுரிமையும் முதல் நோக்கமும் தமது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்டு மக்கள் வரிப்பணத்தில் சுகம் அனுபவிப்பதே அன்றி நாட்டின் அமைதி, சுபீட்சம் இரண்டாம் பட்சமே என்பதற்கும் இது ஒரு சிறந்த உதாரணமல்லவா?

# விளையாட்டு வீரர்களுக்கு உடல்வலு மட்டுமன்றி உளவலுவும் தேவை.... ஏன் என்கிறீர்களா?

## மருத்துவக் கண்காட்சிக்குச் சென்று அறியுங்களேன்!

விளையாட்டு வீரர்களே! நீங்கள் விளையாட்டில் ஈடுபடுவதறகான முழுமையான உடற் தகுதியைப் பெற்றுள்ளீர்களா?, விளையாட்டில் பங்குபற்றுவதற்கேற்ற மன நிலையில் உள்ளீர்களா?, விளையாட்டு உளவியல் என்றால் என்ன என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா?

இவை அனைத்திலும் தெளிவு பெற்றால்தான் நீங்கள் ஒரு சிறந்த விளையாட்டு வீரராக முடியும். இதற்கான இரகசியத்தைத் தெளிவாகவும் விரிவாகவும் அறிய நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

உடல் பருமன் உள்ளவர்களே! நீங்கள் உடல் எடையைக் குறைக்க விரும்புகிறீர்களா? உடலை வலுவாக்க விரும்புகின்றீர்களா? கவலைப்படவேண்டாம்.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஆரம்பமாகும் கண்காட்சிக்குச் சென்று அங்குள்ளவற்றைக் கண்டும் மருத்துவ மாணவர்கள் சொல்வதைக் கேட்டும், உணர்ந்தும் கொள்ளலாம்.

> யாழ். பல்கலை. மருத்துவபீடத்தின் வெள்ளிவிழாவையொட்டி
> மாபெரும் மருத்துவக் கண்காட்சி
> எதிர்வரும் 5-9 ஆம் திகதிகளில்
> ஊடக அனுசரணை:- உதயன்

மருத்துவபீடக் கண்காட்சியில் இடம்பெறவுள்ள மற்றும் இரு அலகுகள் வன்கூடு, தசைத் தொகுதிகளும் விளையாட்டு மருத்துவமும் ஆகும்.

இதன் கீழ் மூன்று பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- ★ உடல் கூற்றியல்
- ★ உடல் தொழிலியல்
- ★ நோய்களும் அவற்றிலிருந்து பாதுகாப்பும்

எலும்புகள் என்ற தலைப்பின் கீழ் உடலில் உள்ள அனைத்து எலும்புகளினதும் உண்மையான உருவங்களும், மாதிரி உருவங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

மூட்டுக்கள் என்பதன் கீழ் வயோதிபர்களுக்கு ஏற்படும் மூட்டு வாதம் பற்றிய முழுமையான விளக்கம் வழங்கப்படவுள்ளது.

மொழிவாதம், நாரி நோ ஆகிய நோய்கள் வராமல் தடுப்பது எவ்வாறு என்பது பற்றியும் விளக்கமளிக்கப்படும். யாழ்ப்பாணத்தில் மொழி வாதத்துக்கு ஆளாவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் அது பற்றி முழுமையான தகவல்கள் வழங்கப்படவுள்ளன. மொழிவாதம் ஏற்பட்டிருப்பதை எவ்வாறு கண்டறிவது, அதற்கு எவ்வாறான சிகிச்சை மேற்கொள்ள வேண்டும், மொழிவாதத்தினை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மூலம் எவ்வாறு குணப்படுத்துவது என்பன தொடர்பாகப் படங்கள் காண்பிக்கப்பட்டு விளக்கமளிக்கப்படும்.

### மாணவர் பயன்பெறுவர்

அத்துடன் உடலில் என்ன வகையான எலும்புகள் உள்ளன, அவற்றின் தொழிற்பாடுகள், இழையவியல் வேறுபாடுகள், கசிவிழையம் என்பன தொடர்பான அனைத்துத் தகவல்களையும் இப்பிரிவைப் பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இவை கூடுதலாக ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் உயிரியல் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் அத்தியாவசியமானதாக அமைகின்றன. எனவே, உயிரியல் பாடத்தைக் கற்கும் மாணவர்கள் தமது பாடசாலைகளில் ஆசிரியர்களிமிருந்து கற்காத பல விடயங்களை இக்கண்காட்சியில் கலந்துகொள்வதன்மூலம் பெற்றுத் தெளிவடைய முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதம் என்ற தலைப்பின்கீழ் பாதத்தை எவ்வாறு பேணுவது, எவ்வாறான பாதணிகளை அணியவேண்டும், பாதத்திற்கு ஒவ்வாத பாதணிகளை அணிவதால் எவ்வாறான நோய்கள் ஏற்படுகின்றன என்பன தொடர்பாகவும் விளக்கமளிக்கப்படும்.

அத்துடன், இப்பிரிவில் விளையாட்டு மருத்துவம் என்னும் முக்கியமான ஒரு பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தற்காலத்தில் விளையாட்டு ஒரு முக்கிய துறையாக உள்ளதால் விளையாட்டு மருத்துவம் பற்றிய மிகவிரிவான உரைகள் வழங்கப்படவுள்ளன.

விளையாட்டின்போது உடலில் ஏற்படும் பிரச்சினைகள், போஷாக்கு, எந்தெந்த விளையாட்டுக்கு எவ்வாறான உணவுகளை உண்ணவேண்டும், எவ்வகையான உணவு வகைகளைத் தவிர்க்கவேண்டும் என்பன தொடர்பாகவும் விளக்கம் பெறலாம். விளையாட்டில் ஈடுபடுவோர் எவ்வாறான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும், விளையாட்டின்போது ஏற்படும். காயங்களுக்கு எந்தவிதமான முதலுதவிகளை வழங்கவேண்டும் என்பன தொடர்பான பூரண தகவல்களும் விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

### எலும்பு முறிந்தால்....

இவற்றுடன் சகலவிதமான எலும்புமுறிவுகள் தொடர்பான 'எக்ஸ்ரே' படங்களும் காண்பிக்கப்படவுள்ளன.

விளையாட்டுக்களில் ஈடுபடுவோர் உடல்ரீதியாக மட்டுமல்லாது உளரீதியாகவும் தகுதியுடையவர்களாக இருக்கவேண்டும். எனவே, விளையாட்டு உளவியல் என்றால் என்ன என்பதை விளையாட்டு வீரர்களுக்கு விளங்கவைப்பது, வீரர்கள் எவ்வகையான உளவியல் மனப்பாங்கைக் கொண்டிருக்கவேண்டும், உடலின எடையைக் குறைப்பது எவ்வாறு, உடல் வலுப்பெற விரும்புவோர் எந்த வகையான உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும் என்பன தொடர்பாக்ச் செயற்பாடுகளுடன் கூடிய விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

மொத்தத்தில் இப்பிரிவு உடலின் ஆரோக்கியம் குறித்து முழுமையாகத் தெளிவுபடுத்துவதற்கென அமைக்கப்பட்டுள்ளது. எனவே, வயோதிபர்கள், மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் இதனை அவசியம் பார்வையிட வேண்டுமென்கிறார் இப்பிரிவின் தலைவர் .

தொகுப்பு : தேவா

# குடாநாட்டில் 39 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த வருடம் வீடுகள் அமைக்க வேண்டும்

## யாழ். அரச அதிபர் அரசுக்கு அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்3

குடாநாட்டில் இந்த வருடம் 39ஆயிரத்து 190 குடும்பங்களுக்குப் புதிதாக வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

வீடமைப்புத் திட்டம் தொடர்பாக அரசுக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் அரச அதிபர் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் மீளக்குடியமர்ந்த 40 ஆயிரம் குடும்பங்களுக்கு புதிதாக வீடுகள் அமைக்க வேண்டியுள்ளது.

மன்னார் மற்றும் ஏனைய மாவட்டங்களில் இருந்து ஆயிரம் குடும்பங்களும் இந்தியாவில் இருந்து 200 குடும்பங்களும் முஸ்லிம் குடும்பங்கள் 500 உம் அதிபாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த 5ஆயிரம் குடும்பங்களும் இவ்வருடம் குடாநாட்டில் மீளக்குடியமரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குடும்பங்களையும் சேர்த்து 46 ஆயிரத்து 700 குடும்பங்களுக்குப் புதிதாக வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டியுள்ளது. இதில் அரசசார்பற்ற நிறுவனங்கள் 7 ஆயிரத்து 510 வீடுகளை அமைக்க இணங்கியுள்ளன.

எஞ்சிய 39 ஆயிரத்து 190 குடும்பங்களுக்கு வீடு அமைக்க நிதி வழங்கவேண்டும் - என்றுள்ளது. (ம-3)

# நகரில் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுவதில் பொலீஸார் தீவிரம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ். நகரப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் சுவரொட்டிகளையும், அலங்கார சோடனைகளையும் அகற்றும் பணியில் யாழ். பொலீஸார் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். பஸ் நிலையம் உட்பட ஏனைய இடங்களில் ஒட்டப்பட்டுள்ள வேட்பாளர்களின் சுவரொட்டிகளை அகற்றியதுடன அவற்றின் மீது கழிவு ஒயில் பூசும் நடவடிக்கைகளிலும் நேற்று முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், ஸ்ரான்லி வீதியில் ஈ.பி.டி.பி. அமைப்பினரால் கட்டப்பட்டிருந்த சோடனைகளையும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஈ.பி.ஆர். எல்.எவ். வரதர் அணியினராலும், பலாலி வீதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியினராலும் கட்டப்பட்டிருந்த அலங்காரச் சோடனைகளையும் பொலீஸார் அறுத்து அகற்றியுள்ளனர்.

அதேவேளை -

அரசியல் கட்சிகளின் அலுவலகங்களுக்கு முன்னால் கட்டப்பட்டுள்ள சோடனைகளும், வைக்கப்பட்டுள்ள 'கட் அவுட்'டுக்களும் அகற்றப்படவில்லை. (ம-5)

> **நாளை**
> மாசி 21
> வியாழக்கிழமை
> (04.03.2004)
> திதி : திரயோதசி
> பின்னிரவு 6.04
> நட்சத்திரம் : பூசம்
> பகல் 10.41
> பிரதோஷவிரதம்
> சுபநேரம் : 7.56 - 9.26
> ராகுகாலம்: 1.56 - 3.26
> (பழைய நேரப்படி)

> **உதயவாக்கு**
> கொதிக்கும் நெஞ்சை குளிர்மொழி அணைக்கும்.

# தெல்லிப்பழைவாசி நீர்கொழும்பில் கடலில் மூழ்கி மரணம்!

வெளிநாட்டில் இருந்து விடுமுறையில் வந்த குடும்பஸ்தர் ஒருவர் நீர்கொழும்புக் கடலில் குளித்த சமயம் கடலில் மூழ்கி மரணமானார்.

தெல்லிப்பழை, வீமன்காமத்தைச் சேர்ந்த இராசநாயகம் சக்திகுமார் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீண்டகாலம் வெளிநாட்டில் தங்கியிருந்த இவர் விடுமுறையல் வந்து நீர்கொழும்பில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பர்களுடன் சேர்ந்து குளிப்பதற்கு நீர்கொழும்புக் கடலுக்குச் சென்றார். அங்கு குளித்துக் கொண்டிருந்த சமயம் கடலில் மூழ்கிப் பலியானார். (ம-3)

# புலிகளின் கோரிக்கை எதற்காக? ஈ.பி.டி.பி. அமைப்பு அறிக்கை!

கொழும்பு,மார்ச்3

இலங்கையின் அரசமைப்பையோ, இலங்கை அரசின் சட்டபூர்வ நியாயாதிக்கங்களையோ ஏற்றுக்கொள்ள மறுக்கும் புலிகள் இலங்கை அரசு நடத்தும் தேர்தல்களில் வாக்களிக்க வசதி செய்து தரும்படி கோரிக்கை விடுவது முற்றிலும் கேலிக்குரியதாகும் என்று ஈ.பி.டி.பி. அமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து வெளியிடப்படும் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்துள்ள புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மிகவும் தெட்டத்தெளிவாகப் புலிகள் இலங்கையின் அரசமைப்பை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும், இந்த நாடாளுமன்றத்தின் மூலம் தமிழர்கள் தங்களது உரிமைகளைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுமென நம்பவில்லையெனவும் கூறியுள்ளார்.

அவ்வாறாயின், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சி ஒன்றுக்கு வாக்களிக்குமாறு புலிகள் கோருவது உண்மையான அமைதியையும் இன ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்கு அல்ல என்பது தெளிவாகின்றது. (ம)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HERO HONDA உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: No.9, பிளச்சர் ஒழுங்கை, சுண்டுக்குளி. T.P.: 021 222 7357, Mobile - 0777 113880 (29145)

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் கோயில் வீதியில் அமைந்துள்ள மாடி வீடும் அத்துடன், ஒரு சிறிய வீடும் 3½ பரப்புக்காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.குலேந்திரன், C/o கா.ராதாகிருஸ்ணன் (சட்டத்தரணி), 158, சட்டநாதர் வீதி, நல்லூர். கிழமை நாள்களில் மாலை 4.00 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் நேரில் சந்திக்கவும். (29162)

75, கச்சேரி - நல்லூர் றோட்டில் ஒரு பரப்புக் காணியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.பரமேஸ்வரி, 395/4, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 077 6028401. (29170)

### புறொயிலர் விற்பனைக்கு

கல்பேட்ஸ், புறொயிலர் என்பன விற்பனைக்குண்டு. தேறிய நிறை 1kg - 240/= மட்டுமே. தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (கலட்டிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (29163)

### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு அனைத்து வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு அல்லது கொள்வனவுக்கு (சுண்டுக்குளியை அண்டிய பகுதியில்) தேவை. தொடர்பு: இல.9, பிளச்சர் ஒழுங்கை, சுண்டுக்குளி. T.P.: 021 222 7357 (29144)

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர் I பகீரா இன புறொயிலர் குஞ்சுகள் 05.03.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 222 3529, 222 2867. (29111)

### புறொயிலர் குஞ்சுகள்

வடமாகாணத்தின் காலநிலைக்கு ஏற்ப நன்கு வளரக்கூடிய 3 நாள்கள் வளர்ச்சியடைந்த புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு வழங்கப்படும். தொடர்பு: பாலா, இல.18, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 222 6875. (29161)

### திருமண சேவை

1968ஆம் ஆண்டு, ஒன்றில் செவ்வாய் பாவம் குறைந்த, கனடாவில் உயர் தொழில் செய்யும் மணமகனுக்குப் படித்த, அழகான மணமகள் உடன் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 101/1, ஓட்டுமடம் வதி, சிவலிங்கப்புளியடி, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (பதிவுக் கட்டணம் யாவும் இலவசம்). (29153)

## யாழ். நகரில் பாவனைக்குதவாத பொருள்கள் அழிப்பு!

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ். பெரியகடைப் பகுதியில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட மாநகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவினர், அங்குள்ள உணவு விற்பனை நிலையங்கள் மற்றும் உணவகங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்குதவாத அப்பிள்பழம், தோடம்பழம், உழுந்துவடை, இட்லி, தோசை, சூசியம், பிட்டு, இடியப்பம், சோறு போன்றவற்றைக் கைப்பற்றி உரிமையாளர்களின் ஒப்புதலுடன் முற்றாக அழித்துள்ளனர்.

இந்தத் திடீர்ப் பரிசோதனை நடவடிக்கை கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி நிலையங்களில் நுகர்வோர் உணவுப பொருள்களின் தரம், சுத்தம் போன்றவற்றை நன்கு கவனித்துக்கொள்ளல் வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாக மாநகர சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (எ)

## வலி.தென்மேற்கில் அறுவடைசெய்த நெல்லின் விலை நாளுக்குநாள் அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,மார்ச்3

வலி.தென்மேற்குப் பகுதியில் விவசாயிகளால் அண்மையில் அறுவடை செய்யப்பட்ட நெல்லின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

கடந்த வாரம் 850 ரூபா முதல் 900 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்த 70 கிலோ நிறைகொண்ட ஒரு மூடை நெல் இவ்வாரம் ஆயிரத்து 50 ரூபா முதல் ஆயிரத்து நூறு ரூபாவரை அதிகரித்து விற்பனை செய்யப்படுகின்றது.

அண்மையில் அரசு 13 ரூபா 50 சதமாக இருந்த ஒரு கிலோ நெல்லின் விலையை 15 ரூபாவாக அதிகரிப்புச் செய்துள்ளதை அடுத்து, இந்த விலை உயர்வு ஏற்பட்டிருப்பதாக மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளத்தினர் தெரிவித்தனர்.

தனிப்பட்ட வியாபாரிகளே இப்பகுதியில் நெல்லைக்கொள்வனவு செய்து வருவதாகவும், கமநல சேவை கேந்திர நிலையங்கள் மூலம் நெல் கொள்வனவு செய்யப்படுமானால் விவசாயிகள் நன்மைபெற வாய்ப்புக்கள் ஏற்படும் என்றும் - இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதற்கிடையில், நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் காணிகளை உழவுசெய்தல், விதை நெல் கொள்வனவு, பசளை போடுதல், களை பிடுங்கல், அறுவடை செய்தல், அதனை ட்ராக்டர் மூலம் அடித்து நெல பெறுதல் ஆகியவற்றிக்கு விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் என்பன தற்போது மிகவும் அதிகரித்துள்ளதால், நெல்லின் விலை அதிகரிப்பு மிகவும் அவசியமானது என்றும் -

இவ்வாறு அதிகரிப்புச் செய்யப்படாவிட்டால் தாம் நெற் செய்கையில் பெரும் நஷ்டமடைய நேரிடும் என்றும் - வலி.தென்மேற்கு விவசாயிகள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 2004.03.21 ஆம் நாள் நடைபெறும். அங்கத்தவர்களைத் தமது உறுப்புரிமைகளைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டிய பிரேரணைகள் 2004.03.13 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (சி-33573)(12-18-24)

சோ.பத்மநாதன்,
(செயலாளர்)

## கொக்குவில் மனோன்மணி பாலர் பாடசாலைக்கு ஆசிரியை தேவை

கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் மனோன்மணி பாலர் பாடசாலைக்கு ஆங்கில அறிவுடன்கூடிய தகுதியான ஆசிரியைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 15.03.2004 திங்கள்
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
செயலாளர்,
கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம்,
நந்தாவில் அம்மன் கோயில் அண்மை, கொக்குவில்.
(29157) (24-18-12)

## உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம் (வ/து)

### பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்தின் பாவனையில் இருந்த பின்வரும் வாகனங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

01. இசூசு லொறி (1989ஆம் ஆண்டு) 28 ஸ்ரீ 3729
02. குபேட்டா இரண்டு சில்லு உழவு இயந்திரம் (கே.75) 72ஸ்ரீ1516

திகதி : 20.03.2004 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 10.00மணி
இடம் : சங்கத் தலைமைக் காரியாலயம்

வாகனங்களை சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுவோர் 20.03.2004ஆம் திகதி சனிக்கிழமை 10.00 மணிக்கு முன்பதாக ரூபா 500/= கேள்விப்பண வைப்பாகச் செலுத்தி ஏலத்தில் பங்குகொள்ளலாம். இப்பணம் மீளளிக்கப்படும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்,
உடுப்பிட்டி.
01.03.2004 (33538)(39-12-18-24)

நெறியாளர்சபைத் தீர்மானப்படி.
தலைவர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1933 – 01 – 04



மறைவு 2004 – 02 – 02

### அமரர் அருணாசலம் இராசரத்தினம்

எங்கள் ஐயா!
நாள்கள்தான் 31 சென்றதையா!
உங்கள் நினைவு என்றும் எங்கள்
நெஞ்சை விட்டு 31 வினாடி கூட
செல்லவில்லை ஐயா!
31 நாள்களும் நீங்கள் சென்ற இடம்தான் யாதோ?
உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

வாகையடி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (29154) (12-18-24)

- குடும்பத்தினர்.

## மாநகர சபை - யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல் - 2004

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் தரம்-9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

*கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி: 18.03.2004 ஆம் திகதி பி.ப. 15.00 மணி*
*கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 19.03.2004 ஆம் திகதி பி.ப. 13.00 மணி*
*கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி: 19.03.2004 ஆம் திகதி பி.ப. 14.00 மணி*

கேள்விப் பத்திரங்கள் யாவும் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும், அல்லது இதற்கென இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் வற் உட்பட |
|---|---|---|
| 1. நவீன சந்தையில் 2 மல கூடங்களிற்கு மாபிள் பதித்து வர்ணம் பூசும்வேலை | 2000/- | 240/- |
| 2. சுப்பிரமணியம் பூங்காவில் இருக்கைகளும் (Benches) வீதிகளின் விளிம்பு சுவரும் (Kerb wall) அமைக்கும் வேலை | 7000/- | 600/- |

மேலதிக விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
01.03.2004 (சி-33540) (24-18-12)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் தம்பிஐயா

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் தம்பிஐயா அவர்கள் 01.03.2004 திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-03-2004) புதன்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் திருகோணமலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

100, Green Road,
Trincomala.
(29159) (26-12-18-24)

No. 245, Polhengode Road,
Kirulapana, Co. - 5,
T.P.: 0112 812429.

தகவல்:
ந.சிவசிதம்பரம்
(சகோதரன்).

### கந்தையா தவரத்தினம் (தவம்)

(மாத்தறை வர்த்தகர்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவரத்தினம் 29.02.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - தங்கரத்தினத்தின் அன்பு மகனும் இணுவில் மேற்கைச் சேர்ந்த கனகலிங்கம் - பூமணியின் அன்பு மருமகனும் சிவகலாவதியின் அன்புக் கணவரும் சனார்த்தனியின் (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி - தரம் 7) பாசமிகு தந்தையாரும் சந்திரராசா (மாத்தறை வர்த்தகர்), சற்குணராசா (ஜேர்மனி), நவரத்தினராசா (புத்தளம்), சிவராசா (கனடா), சாரதாதேவி, வாசுகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தகுமார் (லண்டன்), செல்வகுமாரன் (பிரதீப் இஞ்சினியஸ் யாழ். லயன்ஸ் கழகம்), நஞ்சனா, இராசமலர் (ஜேர்மனி), சிவதர்சினி (புத்தளம்), எழிலரசி (கனடா), சிவவடிவேல் (மாமனலை வர்த்தகர்), சிவகுமார் (கனடா), செல்வராணி, சிவகுமாரி, சிவதர்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராஜேந்திரன், மனோகரன், சோதிலிங்கம், பாக்கியலட்சுமி, கிஷ்ணவேணி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2004) புதன்கிழமை 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

றயில் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (29164) (12-18-24)

தகவல்:
K.A.கந்தையா (தகப்பன்),
சிவகலாவதி (மனைவி).

### திருமதி அந்தோனிப்பிள்ளை (செல்வறட்ணம்) அலோசியஸ்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் சென்.அன்ரனீஸ் லேன், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை (செல்வறட்ணம்) அலோசியஸ் அவர்கள் 29.02.2004 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அலோசியஸ் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பென்சமின் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற றிச்சேட் மற்றும் றெஜினோல்ட் (ஜேர்மனி), காலஞ்சென்ற ரிலியட் மற்றும் திருமதி கரியட் பயஸ், ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி றெஜினா றிச்சேட், திருமதி ஆன் சுசிலா றெஜினோல்ட், காலஞ்சென்ற விஜயரட்ணம், பயஸ் (ஜேர்மனி), திருமதி செறின் ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் றிச்சேட் (தம்பா), ஸ்ரெபானி, கெரோலின், மர்லின், விணோஜ், சுகிர்தினி, சுபோதினி (சிந்தியா), அனிற்றா, கிறிஸ்ரர், ஈவோன், ஜொசி, எறின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.அன்ரனீஸ் லேன்,
பண்டத்தரிப்பு. (29169) (26-12-18-24)

தகவல்:
தம்பா (பேரன்).

# புலிகளை ஜனநாயக ரீதியாகப் பலப்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்துள்ளது

## அதனை வலுப்படுத்த தமிழ் மக்களின் ஆதரவு வேண்டும் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம்,மார்ச்3

விடுதலைப் புலிகளை ஜனநாயக ரீதியாகப் பலப்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் முன்வந்துள்ளோம். அதனை வலுவூட்டுவதற்குத் தமிழ் மக்கள் தமது பூரண ஆதரவை வழங்கவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராஜா.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கூட்டமைப்பின் தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் மத்தியிலே மிகவும் பலம்வாய்ந்த பெரிய ஜனநாயக சக்தியாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வளர்ந்திருக்கிறது. கூட்டமைப்பிலே கடந்த தேர்தலில் பேட்டியிட்ட நான்கு கட்சிகளிற்கும் மேலாகப் பல அங்கத்தவர்களைக் கொண்டிருக்கின்ற வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோர் எம்முடன் இணைந்து செயற்பட முன்வந்திருக்கின்றார்கள்.

இதனடிப்படையில் ஜனநாயக ரீதியாக மிகப்பெரிய சக்தி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் முற்று முழுதாக வாக்களித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் எமது வேட்பாளர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது தேர்தல் விஞ்ஞாபனமானது கூட்டமைப்பில் இணைந்துள்ள நான்கு கட்சிகளில் அங்கத்தவர்களையும் ஏனைய பிரதிநிதிகளையும் இணைததே தயாரிக்கப்பட்டது. இதில் தமிழ் மக்களின் வரலாறு பற்றித் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் எமது தலைவர்களால் அரசியல் ரீதியாகப் பல்வேறுபட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டன. அவை வெற்றியளிக்காத காரணத்தால் ஆயுதப் போராட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதில் மிகவும் பலம் வாய்ந்த சக்தியாக இன்று விடுதலைப் புலிகள் வளர்ந்துள்ளார்கள். அவர்களுடைய போராட்டத்தைச் சர்வதேச சமூகமும் ஏற்றுள்ளது.

அதனடிப்படையில் கடந்த இரண்டு வருடங்களாக யுத்தநிறுத்தம் ஏற்பட்டு சிங்கள தேச அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டு வந்தனர்.

விடுதலைப் புலிகள் வசம் தமிழ்த் தேசத்தினுடைய பெரும் பகுதி இருபதுடன், தமிழ்த் தேசத்தினுடைய ஆட்சிக்கு முன்னோடியாக - இலங்கை அரசுக்கான மாற்று அரசு போன்ற - மிகவும் சிறந்த நிர்வாகம் அவர்களால் நடத்தப்படுகிறது.

அவ்வாறான சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் தாமாகவே முன்வந்து சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், அதனைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஜனாதிபதி ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து நாடாளுமன்றத்தைக் கலைத்ததன் மூலம் விடுதலைப் புலிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளதுடன், சமாதானச் சூழலையும் குழப்பியுள்ளார்.

தற்போது தென்பகுதியில் ஏற்பட்டுள்ள அரசியல் போட்டிச் சூழலில் மீண்டும் ஒரு சமாதானப் பேச்சு தொடருமா என்ற சந்தேகம் எம் மத்தியில் இருக்கின்றது.

எனவே, விடுதலைப் புலிகளைப் பலமாக ஜனநாயக ரீதியாக ஆதரிக்கும் முடிவுக்கு நாம் வந்துள்ளோம். அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ் மக்களை அழைக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் சர்வதேச ரீதியாகவும் தென்னிலங்கை பேரினவாத சக்திகளாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பலம் பொருந்திய இராணுவ அமைப்பைக் கொண்டவர்கள் மட்டுமல்லர். எமது தேசத்திலே தமது அரசியல் நடவடிக்கைகள் மூலம் மாற்று அரசையே அமைத்து செயற்படுத்தி வருகின்றனர்.

தமிழ்த்தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமையை நாம் பயன்படுத்துவதற்குத் தேர்தலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வாக்களிக்கவேண்டும் என நாம் தமிழ் மக்களிடம் வேண்டுகின்றோம் - என்றார்.

இந்த மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சி.வி.கே.சிவஞானம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ம-5-ரி)

# வேட்பாளர்களுடன் சந்திப்பு


திருமலை,மார்ச்3

திருகோணமலை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி காமினி ரொட்ரினோ எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் குழுக்களின் தலைவர்களை நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகப் பணிமனையில் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது சுவரொட்டிகள், பதாதைகள் மற்றும் கட் அவுட்டுக்களைப் பொது இடங்களில் காட்சிக்கு வைப்பது சட்ட விரோதமான நடவடிக்கையாகும் எனத் தெரிவித்துள்ளார். ஆனால், பொதுக் கூட்டம் நடைபெறும் இடங்களில் இவற்றைக் காட்சிக்கு வைக்கமுடியும் எனத் தெரிவித்த அவர், பொதுக் கூட்டம் முடிந்தவுடன் இவற்றை அகற்றிவிட வேண்டும் எனவும் கூறினார்.

இதேவேளை, இரவு எட்டு மணி வரை பொதுக் கூட்டங்களை நடத்த முடியும் என்றும் - கட்சித் தலைவர்களைப் பொறுத்தவரை இருபத்து நான்கு மணி நேரமும் கூட்டங்களில் பேசமுடியும் எனவும் தெரிவித்த தெரிவத்தாட்சி அதிகாரி, இரவு எட்டு மணிக்கு சம்பந்தப்பட்ட கட்சிகள் கூட்டத்தினை முடித்த பின்பும் கட்சித் தலைவர் வரத் தாமதமானால் அவர் வந்த பின்னர் கூட்டத்தினை நடத்துவதற்கு அனுமதி உண்டு எனவும் கூறினார்.

(ம-187)




ஏப்ரல் மாதத்தில் நடக்கவுள்ள நடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ். மாவட்டத்தில் போட்டியிடவில்லை. எனினும், அதன் யாழ். அலுவலகம் ஜனாதிபதி சந்திரிகாவின் படங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

# தமிழர் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தல்: முன்னாள் எம்.பி. கஜேந்திரகுமார் தெரிவிப்பு

வலி.வடக்கு,மார்ச்3

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் எம் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்ற தேர்தலாக அமையவுள்ளது.

மேற்கண்டவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுமுன்தினம் இணுவில் கந்தசாமி கோவில் முன்றிலில் க.கிரிதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தெரிவித்ததாவது:-

1977ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் மக்கள் தங்களுடைய இலக்கையும் கொள்கையையும் நோக்கையும் தெளிவாக வெளிப்படுத்தினார்கள். ஆனால், அன்று எம்மிடம் போதிய இராணுவ பலம் காணப்படவில்லை. சிங்களத் தேசம் இன்று நாம் கேட்ட எதனையும் தர மறுத்துவிட்டது.

வரப்போகின்ற தேர்தலிலும்கூட தமிழ்மக்கள் மீண்டும் தமது விருப்பம் கொள்கைகளைச் சர்வதேசத்திற்கு மீண்டும் வெளிப்படுத்தவுள்ளார்கள்.

இதற்கு சிங்களத் தேசம் கட்டாயம் செவிசாய்க்க வேண்டும். மதிப்பளிக்க வேண்டும். இதனையும் கடந்த காலங்களைப்போன்று புறந்தள்ளியோ அன்றித் தூக்கி எறிந்தோ செயற்படுமாக இருந்தால் அதனால் ஏற்படக்கூடிய அனைத்து விளைவுகளுக்கும் சிங்களத் தேசமே பொறுப்பேற்க வேண்டும்.

தற்போது நடைபெறவுள்ள தேர்தல் எம் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்ற தேர்தலாக அமையவுள்ளது.

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமது மக்களின் உணர்வுகள், கொள்கைகள் அனைத்தும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதனை அனைவரும் படித்து நன்கு புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

மக்களைப் பிழையான பாதையில் வழி நடத்திச் செல்வதற்கு பலர் இன்று முனைந்து நிற்கின்றார்கள். இதற்கு தமிழ்மக்களாகிய நாம் பலியாகிவிடக்கூடாது.

பிழையான வழியில் மக்களைக் கொண்டுசெல்ல முனையும் சக்திகளை இனங்கண்டு முறியடிப்பதுடன், புறந்தள்ள வேண்டியதும் ஒவ்வொரு தமிழனின் கடமையும் பொறுப்புமாகும் எனவும் குறிப்பிட்டார்.

சி.வீ.கே.சிவஞானம், கஜேந்திரன, ஈழவேந்தன், சிவாஜிலிங்கம், இளம்பரிதி, திருமதி அ.பத்மினி உட்பட மற்றும் பலர் கூட்டத்தில் உரையாற்றினர்.

(ம-86)

# கூட்டமைப்பின் பிரசாரம் திருமலையில் ஆரம்பம்

திருகோணமலை,மார்ச்3

தமிழ்க் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள் நேற்றுமுன்தினம் தமது பிரசாரத்தை சிவன் கோயிலடியில் ஆரம்பித்தனர்.

திருமலை சுந்தா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பேசிய வேட்பாளர் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் இந்தத் தேர்தலில் 20இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற ஆசனங்களைக் கூட்டமைப்பு வெல்லும் என்றும் தெரிவித்தார்.

தமிழ்ச் சமூகத்தின் சுயநிர்ணய உரிமைக்கான தேர்தலாக இதனைக் கருதி இந்த மாவட்டத்திலிருந்து இரண்டுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டும் எனவும் சம்பந்தன் கோரினார்.

முன்னதாக வேட்பாளர்கள் அனைவரும் அரசடி பகுதியிலிருந்து முத்துச் சப்பரத்தில் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டிருந்தனர்.(ம-187)

# பதவிக்காக அல்ல தேசியத்தை பாதுகாக்கவே தேர்தலில் போட்டி

## வேட்பாளர் ரவிராஜ் கூறுகிறார்

வலி.வடக்கு,மார்ச்3

அமைச்சுப் பதவிக்காகவோ, பதவிக்காகவோ நாம் தேர்தலில் போட்டியிடவில்லை. எமது தேசியம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலேயே நாம் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் என்.ரவிராஜ்.

சுன்னாகத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் இனத்தின் விடுதலைக்காகவும் மொழியின் விடுதலைக்காகவும், பாதுகாப்புக்காகவும் இன்று போராட்டமே நடந்துகொண்டு இருக்கின்றது. இப்போராட்டத்தையும் அதன் தேவையையும் முழு உலகமும் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு நாம் அனைவரும் ஓர் அணியில் திரண்டு நிற்கவேண்டியது அவசியமாகும்.

ஆயுதப் போராட்டத்தில் வலிமை சேர்த்து முழு உலகமும் மதித்து நிற்கும் புலிகளுக்கு அரசியல் ரீதியாக வலிமை சேர்ப்பவர்களாக நாம் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி தமிழ் இனத்தை வாழ வைக்கும் ஒரு நாளாக அமையவேண்டும். இன்றைய சூழலின் தேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து நாம் செயற்படவேண்டியது அவசியமாகும்.

அமைச்சைக் கேட்டோ அன்று பதவியைக் கேட்டோ இன்றைய தேர்தலில் நாம் செயற்படவும் இல்லை, போட்டியிடவும் இல்லை எமது தேசியம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலேயே நாம் தேர்தலில்




போட்டியிடுகின்றோம்.

இன்று இங்கு வீணைவாசித்துக் கொண்டு இருப்பவர்களையும் பூட்டுப் போட்டுக்கொண்டு இருப்பவர்களையும் மற்றும் உதிரிக் கட்சிகளையும் புறம்தள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மக்களாகிய நாம் இதற்கு எமது முழுவலிமையையும் பயன்படுத்த வேண்டியதும் அக்கறை காட்டவேண்டியதும் தமிழர்களின் முக்கிய கடமையாகும். இதற்கு நாம் எமது முழுமையான வாக்குப் பலத்தையும் வெளிக்காட்டவேண்டியது அத்தியாவசியமாகும் எனவும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் உரையாற்றிய வேட்பாளர் சூ.சிறில் தெரிவித்ததாவது:-

தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் ஆகியோர் இலங்கை நாடாளுமன்றத்தில் பெறமுடியாததை நாம் பெற்றுத்தருவோம் என்று யாரும் சிந்திக்கவேண்டாம்.

அஹிம்சை வழியில் எதனையும் தமிழ் மக்கள் பெறமுடியாது; வெல்ல முடியாது என்ற நிலையிலேயே தேசியத் தலைவர் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்.

13ஆவது நாடாளுமன்றம் தமிழ் மக்களுடைய பிரச்சினையை உணர்ந்து சரியான முறையில் தமிழ் மக்களுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கவேண்டும். தவறும் சந்தர்ப்பத்தில் இதுவே தமிழனுடைய ஸ்ரீலங்காவின் இறுதி நாடாளுமன்றமாகவும் தேர்தலாகவும் இருக்க முடியும்.

தேசியத் தலைவரின் ஆணையை ஏற்றுச்செயற்பட இன்று பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் தயார் நிலையில் இருக்கின்றார்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ம-86)

**நாட்டின் வருமானத்தை ஈட்டுவதிற் பெரும்பங்கேற்பவர்கள் பெண்கள்.**
**ஆனால், பெண்களின் பொருளாதார நிலை??........**
**பொருளாதார ரீதியில் தங்களை மேம்படுத்தும் உரிமை பெண்களுக்கு உண்டு.**
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டம்
தொ.பே.:011-2662587, 021-222 5470.
(C/33499)(24-13-19)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம்
தனது வெள்ளிவிழாவை ஒட்டி நடத்தும்
**பிரமாண்டமான மருத்துவக் கண்காட்சி**

**மார்ச் 5 முதல் 9 வரை**

யாழ்ப்பாண மருத்துவ பீட வெள்ளிவிழாக் கொணடாட்ட ஆரம்ப நிகழ்வாக 05-03-2004 தொடக்கம் 09-03-2004 வரை மருத்துவக் கண்காட்சி நடத்தப்படுகின்றது. இக்கண்காட்சி யானது 05-03-2004 அன்று காலை 10.00மணிக்கு ஆரம்ப மாகும். மறுநாள்களில் காலை 9.00மணிக்கு ஆரம்பமாகித் தினமும் இரவு 9.00மணிவரை நடைபெறும்.

நுழைவுக் கட்டண விவரங்கள்:
மாணவர்களுக்கு: ரூபா 20.
மற்றவர்களுக்கு: ரூபா 30.

நுழைவுச் சீட்டுக்களுக்கான விற்பனை தினமும் மாலை 5.00 மணியுடன் நிறுத்தப்படும். பள்ளி மாணவர்களுக்கான நுழைவுச்சீட்டுகளை மருத்துவ பீட காரியாலயத்தில் முன்கூட்டியே பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவபீட வெள்ளிவிழா அமைப்புக்குழு,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-33531)(36-11-17)

ஊடக அனுசரணை: உதயன்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 - 07 - 1942 | 02 - 02 - 2004 |

### திருமதி சுப்பிரமணியம் பராசக்தி

*அன்போடும் பண்போடும் ஆதரவாய் அரவணைத்து*
*இன்முகங்காட்டி இனியமொழி பேசிய தெய்வமே!*
*நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் நெஞ்சைவிட்டு அகலாது*
ஆத்மா சாந்திபெற
அன்னை காளிதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்பு அன்னையின் மறைவுகேட்டு ஓடோடி வந்து ஆறுதல்கூறி தேறுதலளித்த அன்புள்ளங்களுக்கும் உற்றநேரத்தில் உறுதுணையாயிருந்து பல வழிகளிலும் எமக்கு உதவிகள் செய்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித் தோருககும் மற்றும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.

தற்காலிக முகவரி: யாழ். வீதி, உடுப்பிட்டி.
நிரந்தர முகவரி: முதலாம் வட்டாரம்,
வயாவிளான்.

- குடும்பத்தினர்.
(29019)(34-36-11-13)

## வளர்ப்பு நாய்களுக்கு இம்மாதம் தென்மராட்சியில் தடுப்பூசி

தென்மராட்சி,மார்ச்3

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படும் என பணிமனைப் பொறுப்பதிகாரி அறி வித்துள்ளார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மிருசுவில் வடக்கு சனசமூக நிலையம், கொடிகாமம் கிராம சபைஅலுவலகம், எதிர்வரும் 15 ஆம் திகதி வரணி, இயற்றாலை சனசமூக நிலையம், இடைக்குறிச்சி சனசமூக நிலையம் - எதிர்வரும் 16 ஆம் திகதி மீசாலை வடக்கு சனசமூக நிலையம், மீசாலை வடக்கு நளினி முன்பள்ளி, இம் மாதம் 18 ஆம் திகதி மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையம், மட்டுவில் வடக்கு அம்பாள் சனசமூக நிலையம், இம்மாதம் 22 ஆம் திகதி கைதடி மத்தி சனசமூக நிலையம், கைதடி சனசமூக நிலையம், கைதடி கிராமசபை அலுவலகம், எதிர்வரும் 25 ஆம் திகதி மீசாலை கிழக்கு நாமகள் சனசமூக நிலையம், கச்சாய் அம்மன்கோவிலடி - மார்ச் 26 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை அலு வலகம், கெருடாவில் சனசமூக நிலை யம், மார்ச் 30 ஆம் திகதி தச்சன் தோப்பு கிராமசபை அலுவலகம், கோவிலாக்கண்டி சனசமூக நிலையம்-

மேற்படி தினங்களில் தமது வளர்ப்பு நாய்களுக்கு தவறாது விசர்நோய் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுளது.

(எ-117)

## வசந்தமண்டபம் நிர்மாணிப்பு

சுழிபுரம், மார்ச்3

தொல்புரம் துரையன் வளவுப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக வசந்த மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு வரு கின்றது.

மேற்படி மண்டபத்தை நிறுவு வதற்கென இந்து கலாசார அமைச்சு ஒரு லட்சம் ரூபாவை வழங்கியி ருந்தது.

(எ-28)

## மூலிகைத்தோட்டம் நிறுவக் காணி ஒதுக்குமாறு கோரிக்கை

மாதகல்,மார்ச்3

தொட்டிலடிக்கும் - விளானுக்கும் இடையில் உள்ள அரசகாணியில் மூலிகைத்தோட்டம் ஒன்றை நிறு வுவதற்கு இடம் ஒதுக்கித்தருமாறு யாழ்.அரசஅதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.சித்தமருத்துவ உற்பத்தி-விற்பனை, வைத்திய சேவைகள் கூட்டுறவுச்சங்கத்தின் முகாமையாளர் கலாநிதி கே.கே.ஸ்ரீகணநாதன் அரச அதிபரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இது குறித்து அவர் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

மூலிகைத்தோட்டம் நிறுவப்பட வேண்டியதன் அவசியம்குறித்து இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-95)

## ஓராண்டு நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வாக | காவியமாக |
|---|---|
| 16 - 10 - 1980 | 07 - 02 - 2003 |

நெடுந்தீவு கடற்பரப்பில் காவியமான
**கப்டன் பொதிகைத்தேவன்**
**சிவஞானஸ்கந்தமூர்த்தி தயாபரன்**



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02 - 04 - 1913 | 20 - 01 - 2004 |

புலோலி தெற்கு,
வடுவாவத்தை வீரபத்திரர் ஆலய பரிபாலகர்
**வைரவிப்பிள்ளை வீரபத்திரபிள்ளை**

தவிர்க்க முடியாத காரணத்தால் தடைப்பட்டிருந்த எமது அன்புச் செல்வத்தின் ஓராண்டு நினைவும், எமது அன்புத் தந்தையாரின் அந்தியேட்டியும் 05.03.2004 வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணியளவில் வடுவாவத்தை வீரபத்திரர் ஆலயத்திலும் தொடர்ந்து எமது இல்லத்திலும் இடம்பெறும் இந்த நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.

வீ.சி.மூர்த்தி (அரசன்)
(தந்தை - மகன்)

(29079, (26-11-13-36)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100/% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ்
வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்!
என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:-
Royal Industries, Colombo.
☎ 0112334603
சத்திரத்துச் சந்திக்கு அருகில் →




ஏக
விநியோகத்தர்கள்
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸபத்தா வீதி
யாழ்ப்பாணம்.
:021 222 2567

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 - 05 - 1930 | 02 - 02 - 2004 |

*வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும்*
*கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட*

### அமரர் செபஸ்தியாம்பிள்ளை பெனடிக்ற் குலசிங்கம்

(Chartered Accountant) Formerly Chairman and Managing Director of Nestles and Partner of Messrs Tudor V.Perera and Company.

*"நீர் எனக்குச் செய்யக் கொடுத்த பணியைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மகிமைப்படுத்தினேன்."*

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 06.03.2004 சனிக்கிழமை காலை 8.00மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாய் செ.மரியம்மா,
சகோதரர்கள்,
செ.அலோசியஸ் இராஜசிங்கம்,
செ.பேனாட் குணசிங்கம்,
செ.அன்ரன் இரத்தினசிங்கம்.

*நெடியகாடு,*
*வல்வெட்டித்துறை.*
(29132)(26-11-13)

## மரண அறிவித்தல்கள்

### ராசு சிங்கராசா



(முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்)

காலையடி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த ராசு சிங்கராசா 28.02.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவாக்கோ, ஷாமா, ஷெயன், சுரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதனின் அன்பு மாமனா ரும் ஆகாசின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஜம்புகோள மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

*காலையடி,*
*பண்டத்தரிப்பு.*
(29137) (24-11-13-36)

### மயில்வாகனம் மாணிக்கதியாகராஜா



நல்லூர், மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில் வாகனம் மாணிக்கதியாகராஜா (27.02.2004) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மயில்வாகனம் - தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் தங்கராஜா - சுந்தரத்தின் பாசமிகு சகோதரனும் புவனேஸ்வரி, விமலாதேவி (இந்தியா), சிவராஜா (பிரான்ஸ்), சிமித்திரா (லண்டன்), இராமச்சந்திரன் (பிரான்ஸ்), மனோகரன் (பிரான்ஸ்), வசந்தா, வனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் செல்லத்துரை, கயிலாசநாதர் (இந்தியா), வேவி (பிரான்ஸ்), செல்வராஜா (லண்டன்), அழகரத்தினம் (பிரான்ஸ்), தாமரைச்செல்வி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (லண்டன்), மகேந்திரன (பிரான்ஸ்), பிச்சேஸ்வரி - பரமானந்தம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுமதி - உதயகுமார், காலஞ்சென்ற சுதாநிதி (கனடா) மற்றும் சுதர்சன் - தர்மப்பிரியா (பிரான்ஸ்), துவாரகா (மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), சுஜிதா - சுதர்சன் (லண்டன்), சுஜிபா - சுமங்கலா (பிரான்ஸ்), சுஜிராஜன் (லண்டன்), வனஜா, வவிதா (இந்தியா), யோகிதா (லண்டன்), பிரகாஷ், வாகீசன், அஜந்தன், கரிகரன், லஷ்மன், யுவன்சன், அனுஷன், நிரோஷன் (பிரான்ஸ்), ஜெனனி, தர்ஷன் (மாணவர்கள், யாழ்/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), ரஞ்சனா - சச்சிதானந்தம் ஆகியோரின் பாசமிகு பேரனும் அபிதயா, நிபோஷனன், மிதுஷன், அட்ஷயா, அட்ஷன், டிலக்ஷா, அபிஷன், ஆகாஷ், சரண்யா, சரண்ராஜ், அருண்குமார் ஆகி யோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2004) புதன்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
M.வசந்தா (மகள்).

*215/2, கச்சேரி நல்லூர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(29060)(36-11-13)

# 'நாரிப்பிடிப்பு' மனித உபாதைகளில் ஒன்றே

நாரிப்பிடிப்பு என்பது இன்று இளையவர் முதல் முதியவர்கள் வரை பலராலும் அடிக்கடி பயன்படுத்தும் சொல்லாகி விட்டது. இன்னொரு வகையில் கூறப்போனால் பலரையும் பிடித்துள்ள பலருக்கு உபாதையைத் தரும் ஒன்றாகவும் இது மாறிவிட்டது. ஆங்கிலத்தில் இதனை Scialica என்றும், ஹிந்தியில் 'கடுத்ரசி' என்றும் அழைப்பர். கடுத்ரசி என்பது Vulture ஐக் குறிக்கும் அதாவது இறந்த உடலை உணவாகக் கொள்ளும் பிராணியான கழுகு என்னும் பறவையினைக் குறிக்கும். இப்பறவை நடக்கும் நடை எவ்வாறு இருக்குமோ அதேபோன்று இந் நோயினால் பீடிக்கப்பட்டவர்களும் நடந்து கொள்வர். எனவே, கடுத்ரசி என்னும் பெயரைப்பெற்றுள்ளது.

இது எண்பது வகை வாதங்களுள ஒன்றாகும். அவ்வாறு இருந்தபோதும், கோளாறடைந்த வாதம் தனித்தோ கபத்துடன் சேர்ந்தோ கடுத்ரசி உண்டாவதாகக் கருதப்படுகின்றது. இது சூலை அல்லது வேதனையைப் பிரதானமாகக் கொண்டிருக்கும். வாதம் தனித்து ஒரு ரோகத்தை உண்டாக்குமானால் அதை ஆஷேபம் என்றும், வேறு தோஷங்களுடன் சேர்ந்துண்டாகுமானால் அதனை சாமான்யங்கள் என்றும் அழைப்பர்.

வாதத்தின் தொழில்களில் பங்கம் ஏற்படுமானால் உடலில் மாற்றங்கள் ஏற்படுவதைக் காணலாம். எமது முன்னோர் வாதரோகத்தை பூரணவாத ரோகம், சாமான்ய வாதரோகம் என இரண்டு வகையாகப்பிரித்துள்ளனர். பூரண வாத ரோகத்தில் ஸ்பரிசமும், அசைவும் அற்றுப்போவதாகவும், சாமான்ய வாத ரோகத்தில் ஸ்பரிசம் அல்லது அசைவு மட்டும்தான் அற்றுப்போவதாகவும் கூறியுள்ளனர். ரோகம் ஏற்பட்ட இடத்தினையோ அல்லது பிரதான குணத்தினையோ ஆதாரமாகக் கொண்டு இப்பெயர் அழைக்கப்பட்டதாகும்.

நரம்பு சம்பந்தமான ரோகங்களை சூலை ரோகம் என்றும், நோவின்றி ஒருபக்கமோ, இரண்டு பக்கங்களோ இயக்கம் குறைந்தோ, இயக்கம் இன்றியோ போவது பாரிசுவவாதம் என்றும் அழைக்கப்படும். இயற்கையின் தன்மைக் கெதிராக உடல் அசையும் தன்மையற்றுப் போவதை Falsy என்று கூறுவர். உடலின் இயக்கத்தன்மை அதிகரிப்பின் நடுக்குவாதம் (Paricinsonium) என்று அழைக்கப்படும்.




வாதத்தின் தன்மை அற்றுபோனால இயங்கும் தன்மை அப்படியே ஸ்தம்பித்துப் போகும். அவ்வுறுப்பு அசைய முடியாது. உதாரணமாக ஹனுக்ரக (Lock Jaw) உறுப்புக்கள் ஷீரணமடைந்து போகும். இது அம்சசோஷ எனப்படும் (ஷோவு - Attrophy) பிறப்பு வாசியாக உறுப்புக்களில் குறைபாடு உண்டாவது அங்கவீனம் என்று கூறப்படும்.

வாதம் தனித்து கோளாறடைந்துண்டாகும் கடுத்ரசியில் வலி குத்தல போன்றவை முதலில் உடம்பின் பின்புறத்திலும், இடுப்பு, பிருஷ்டம், தொடை, முழங்கால், கீழ்க்கால் எனப் பரவிச் செல்வதுடன் அவயவங்கள் துடிக்கும் தன்மையுடையதாகவும் உணரப்படுகின்றது.

வாதமும் கபமும் சேர்ந்து கோளாறடைந்து உண்டாகும் கடுத்ரசியில் மேற்கூறிய செய்கைகளுடன் சோம்பலும் தேககுருத்துவமும் அரோசகமும் உண்டாகும் கடுத்ரசிக்கு கல்லீ என்ற பெயரும் உண்டு. கடும் வேதனையைப் பிறப்பிப்பதே காரணமாகும். விரல்களில் இருந்து காதலத்தை அனுசரித்து புயத்திற்கு பின்புறமாகப் பரவிக் கண்டத்தொகுதி தாக்கப்படுவதனால் அப்பகுதி அசைக்கமுடியாது போகும். இதனை விச்வசி எனப்படும். காலை இயக்க முடியாது போவதை கடுத்ரசி என்றும கையை இயக்க முடியாது போவதை விச்வசி என்றும் அழைக்கப்படும். இவ்விரு ரோகங்களிலும் கடும் வேதனை உண்டாவதனால் கல்லீ எனப்படுகின்றது.

*சொல்லி எழுபத்தீராயிரமெனும் நரம்பைப்பற்றி*
*புல்லியே லரிந்து கூடிப் பொருந்தவே முடக்கி வாங்கும்*
*வல்லீயோற் சுருக்கி கைகால வழங்கிய நடைகொடாது*
*கல்லீயே முடக்கு வாதக் குணமெனக் கூறினாரே*

(பரராசசேகரம் 4ஆம் பாகம்)

கடுத்ரசி ஒரு வாயுவாகவும் கருதப்படுகிறது. அதாவது இடுப்பில் தொடங்கி தொடை, முழங்கால், கீழ்க்கால் பாதம் எனக் கீழ்நோக்கி படிப்படியாக நோவை ஏற்படுத்தும் இதனை

*"ஓடிய வாதமாகிவுடறலை சந்து நொந்து*
*தேடிய கரங்கள் கால்கள் திறமதாய் மெய்க்கவொண்ணா*
*வாயுரு மேனி தானும் வரண்டிடு நாவும் பல்லும் ஓடிடு முயல்களோடு முனைவுடன் குத்துமுணடே."*

என பரபராசசேகரம் கூறும்.

வாயுவானது ஓர் உறுப்பையோ ஒரு பக்கத்தையோ தாக்கலாம் அல்லது இரு பக்கமும் தாக்குப்படலாம். கோளாற டைந்த வாயுவானது இடுப்பைப்பற்றி சென்று தொடையில் மஹாஸ்நாயுவான கண்டராவை வலித்து இழுக்கையில கால் நொண்டியாகும். இதனை கஞ்ஜம என்று அழைப்பர். அவ்வாறு மறுபகுதியும் சுயாதீனமற்றுப் போவதனால் இது 'பங்கு' என்றும் அழைக்கப்படும்.

கடுத்ரசியைப்பற்றி பலர் பலவிதமாகக் கூறியுள்ளனர். வாயுவானது கோளாறடைந்து தேகத்தில் ஒருவித விஷம் ஏறி இறங்குவதுபோலும், கோளாறடைந்த வாயு நரம்புகளில் சேர்ந்து சருமத்தில் முள்தைத்தது போன்று குத்தல், வலி, வேதனை போன்றவற்றை உண்டாக்கும். உடலில் 900 ஸ்நாயுக்கள் உண்டு. இதில் காலில் 150, கையில் 150 ஸ்நாயுக்கள் காணப்படுகின்றது. காலில் உள்ள ஸ்நாயு தாக்கப்படுவதாலேயே கடுத்ரசி உண்டாகிறது. காலில்உள்ள பெரிய ஸ்நாயுவான கண்டரா தாக்கப்படுவதாலேயே கடுத்ரசி உண்டாகிறது. இவ்வேளையில், அதனுடன் தொடர்புள்ள பேசிகள் - தசைகள் தாக்கத்திற்குள்ளாகி மரத்துப்போய் ஒருவித பிடிப்பு உண்டாகிறது.

கடுத்ரசியைப் பற்றி பலர் பலவிதமாகக் கூறினாலும், அடிப்படை ஒன்றையே குறிக்கும். மஹாஸ்நாயுவான

**வைத்தியக் கலாநிதி**
**கலாநிதி தேவி பொன்னையா**
பிரதம சித்த வைத்திய அதிகாரி
யாழ். மாநகரசபை

கண்டரா (Sciatic Nerve) திருவெண்பு 1,2,3 நாரி என்பு 4,5 ஆகிய ஸ்நாயுக்களின் கிளைகள் ஒன்று சேர்ந்து உண்டாவதாகும். இது கூபக என்பின் துவாரத்தினூடாக தொடையின் நடுமூன்றிலொரு பாகத்தில் ஊடுவஸ்திக்கு (Femur) பின்னால் சென்று பலகிளைகளாகப் பிரிந்து செல்லும். அவை முறையே கீழ்க்கால் (யங்கா), பாதம(சலாக) என்பவற்றுக்குச் செல்லும். இவ்வாறு செல்லும் பாதையில் வெளிக் காரணமாகவோ, உட்காரணமாகவோ தாக்கம் ஏற்படுவதனால் கோளாறடைந்த வாதத்திற்குரிய குணங்களைப் பிறப்பிக்கும். கண்டரா தாக்குப்படு மானால் காலை நீட்டவோ மடிக்கவோ முடியாது. இதற்கெதிராக இயங்குமாயின் குத்தல், வலி, வேதனை உண்டாகும். அத்துடன காலை வீசிவீசி நடந்து கொள்வர்.

*வாயுவே ஜீவாதாரமாகிய வலிமை*
*தன்னாய் மிவுயர் வியாதிக்கெல்லாம் விதித்திடு அரசுமாகும்*
*ஆவுயர் வாயு வின்றி வருந்திட விளைகடாகும்.*
*பாயுமோ காயப்பூட்டிற் பரவையாட்டங்களே யாமால்.*

இதன்மூலம் வாயு உடலில் எவ்வாறு முக்கிய பங்கெடுக்கிறது என்பதனை அறியலாம் கடுத்ரசி ரோகத்தில் நிதான சம்பிராப்தியைக் கவனிக்குமிடத்து பலகாரணங்கள் உண்டு. ஒவ்வொரு ரோகத்திற்கும் உட்காரணம், வெளிக்காரணம் உண்டு.

வாய்வுத் தன்மையுள்ள அதிகளவு உணவையுண்பதாலும் இலகு குணமுள்ள உணவை குறைந்தளவு உணபதாலும், இளங்கணம், அதிக புணர்ச்சி, இரவில் கண்விழித்தல் இரத்தப் பெருக்கு, அதிக வியாயாமம், அதிக வழி நடத்தல், நீந்துதல், கோபத்தை அடக்கல், யோசனை அதிகம் என்பனவாகும். உணவுள்ளெடுப்பது குறையதாது சுயம் ஏற்படும். இதனால் வாதப் பிரகோபம் ஏற்படுகிறது. அரோதஸ்களில் தடை காரணமாக வாயு பிரகோபம் அடையும் குளிர்ந்த உணவை அதிகளவில் உட்கொள்வதால் ஆம் தோஷம் (கபதோஷம்) விருத்தியடைகிறது. மேலும் குருத்தன்மையுடைய உணவை அதிகளவில் உட்கொள்ளல மந்தாக்கினி என்பனவாகும். இவை இரத்தத்துடன் சேர்ந்து சுரோதங்களை அடைப்பதனால் வாயுபிரகோபம் அடைந்து ஸ்நாயு தாக்கப்படுவதனால் ஏற்படலாம். அன்றியும், வேறு வளர்ச்சி காரணமாயும் ஸ்நாயு நசுக்கப்பட்டு செல்லும் பாதை தடைப்படலாம்.

கடினமான ஆசனமுள்ள வாகனத்திலிருந்து கரடு முரடான, ஒழுங்கற்ற பாதைகளில் செலுத்துதல் அபிகாதம் எனப்படும். இதில் மர்ம ஸ்தானங்கள் தாக்கப்படுகின்றது. யானை, குதிரை, ஒட்டகம் போன்றவற்றில் மிக வேகமாகச் செல்லல், மிக உயரத்தில் இருந்து வழ்தல். ✧

# தரம் 5 புலமைப் பரிசில் கொடுப்பனவில் பாரபட்சம் காட்டப்படுவது நீதியா?

இலங்கையில் அரசாங்கத்தினாலும் பொதுநிறுவகங்களாலும் உயர் கல்வி நிறுவனங்களாலும் பொதுநிதியங்களாலும் மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காகப் பலதரப்பட்ட புலமைப் பரிசில் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுள் தரம் 5 புலமைப்பரிசுத திட்டம், ஜனாதிபதி வழங்கும் புலமை பரிசு, ஜி.சீ.ஈ. சாதாரண தர, உயர்தர வகுப்புகளில் உயர்புள்ளி பெற்றவர்களுக்கான வெளிநாட்டு புலமைப் பரிசுத்திட்டங்கள் மற்றும் பல்கலைக்கழக மட்டத்தில் மகாபொல, மாணவர் உதவிப் பணம் (Bursary) துணை வேந்தர் மற்றும் பேராளர் நிதியங்களிலிருந்து வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டங்கள் அடங்குகின்றன.

ஆரம்ப வகுப்பான தரம் 5 பரீட்சை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள, பெற்றோர்கள் என சகல தரப்பினரதும் கரிசனைக்கும், கடும்பிரயத்தனத்திற்குமான ஓர் அதீத கவன ஈர்ப்பு பரீட்சையாக விளங்குகிறது.

முதன்மைநிலை ஒன்று (தரம் 1-2), இரண்டு (தரம் 3-4), முதன்மை நிலை மூன்று (தரம் 5) ஆகிய வகுப்புகளில் ஆரம்பப் பயிற்சிபெற்ற ஓர் ஆசிரியரே தொடர்ந்து கற்பிக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருப்பதற்கு இந்தப் பரீட்சையின் கனதியே காரணம். எனினும், இந்த விதிமுறை ஆசிரிய பற்றாக்குறை மற்றும் காரணங்களால் தீவுப்பகுதி, வடமராட்சி கிழக்கு போன்ற ஒதுக்குப்புறமாக உள்ள பல பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதும உண்மை.

ஆனாலும், இந்தப் பரீட்சையானது வசதியான பாடசாலை அனுமதி பெறுதல், மற்றும் உதவிப்பணம் வழங்குதல் என்ற இரு பிரதான அடிப்படையிலான மிகக்கடுமையான போட்டிப் பரீட்சையாகத் தற்காலத்தில் பரிணமித்துள்ளது.

மாணவர்களுக்கு இடையிலானதாக மட்டுமன்றி பெற்றோர்கள், தனியார் கல்விநிறுவனங்களுக்கு இடையேயான ஒரு போட்டிப் பரீட்சையாகவே நிகழ்கிறது என்றே கூறப்படுகிறது. இது மாணவர்களது வயதுக்குரிய உடல் உள ஆற்றல்களுக்கு மேம்பட்ட ஒரு சுமையாகும். உயர்தர வகுப்புக்களுக்குரியதும அதற்குக் கூடியதுமான போது உளச்சார்பு வினாக்களைக் கொண்டதாக வினாப்பத்திரங்கள தயாரிக்கப்படுகின்றன.

அளவிற்கு அதிகமான உளைச் சலையும கல்வியிலும் அதைப் போதிக்கும் ஆசிரியரிலும் கூட வெறுப்பை ஏற்படுத்தும் இந்தப் பரீட்சையில் உயர்புள்ளிபெற்ற மாணவர்களே தெரிவுசெய்யப்படுகின்றனர்.

இவர்களது புலமைப் பரிசில் கொடுப்பனவில் பாரபட்சம் காட்டப்படுவது தவிர்க்கப்படவேண்டும். அது மிகத் தவறானது என்று சுட்டிக்காட்டப்பட வேண்டியது பொருத்தமானதாகும். இந்தப் பாரபட்சமான அணுகுமுறை "கல்வியில் சமவாய்ப்பு", "கல்வியில் சமசந்தர்ப்பம்" என்ற கோட்பாடுகளை கேள்விக்குரியதாக்கி இருப்பதுடன் கேலிக்குரியதாகவும் ஆக்கியுள்ளது என்பதை மறுக்கமுடியாது.

*செய்திக்கட்டுரை*
**கை.பேரின்பநாயகம்**
மண்டைதீவுச் செய்தியாளர்

சமமானவர்களின் மத்தியில் சிலருக்குத் தூண்டியை (Motivation) வழங்கி விட்டு சிலருக்கு மறுப்பது சரியா? இந்தப் பரீட்சார்த்திகளுக்கான (சித்திபெற்றால்) சரியான பின்னூட்டல் (Feed Back) கொடுப்பனவே புலமைப்பரிசில் கொடுப்பனவாகும்.

பெற்றோர்களின் வருமானம் என்ற சிவப்பு நாடா அளவுகோல் கொண்டு அளக்கப்படுவதால் பல மாணவர்களுக்குரிய கொடுப்பனவுகள் நிராகரிக்கப் படுகின்றன. இதனால், சம்பளப்பட்டியல் மூலம், சம்பளம் பெறும் குறைந்த வருமானமுடைய அரச ஊழியர்களின் பிள்ளைகள்பெருமளவில் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த வகுப்பினர் தமது எதிர்காலதிற்கு கல்வியை மட்டுமே நம்பி உள்ளவர்கள் என்பது மனங்கொள்ளப்பட வேண்டியதாகும். அரச ஊழியர் வருமானம் மிகக்குறைவானது. வாழ்க்கைச் செலவு விரைவாக உயர்ந்து செல்வதால் நானாவிதமான நிதிப்பிரச்சினைகளையும் நெருக்கீடுகளையும் எதிர்கொள்பவர்கள் இவர்களே.

இந்த யதார்த்த நிலையை கல்விச் சமூகம், கல்வி மான்கள், புத்திஜீவிகள், திணைக்களங்கள், தொழிற்சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், அதிகாரிகள் பொதுவாக ஏற்றுக் கொண்டாலும் இதற்கான தீர்வை முன்வைக்கவோ பொதுநிலைப் படுத்தவோ ஸ்தாபன ரீதியாக முன்வராதது மாணவர்களின் துரதிர்ஷ்டமா? இல்லை சாபக்கேடா? என்பதை கல்வி உலகம் சிந்திக்க வேண்டும்.

கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டவர்களிலும் பார்க்க உண்மையில் கூடுதலான வருமானம் பெறும் குடும்பங்களைச சேர்ந்தவர்கள் கொடுப்பனவிற்கு உரித்துடையவர்களாக் கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சையில் சித்தியடைந்த உயர்வருமானம் உள்ளவர்களுக்கான புலமைப பரிசில் பணம் வழங்கப்படக்கூடாது என்பது இந்தக்கட்டுரையின் நோக்கமல்ல. கருத்தும் அதுவல்ல. போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடையே கொடுப்பனவுகளில் ஏன்பாரபட்சம் காட்டப்பட வேண்டும்? வேறு புலமைப் பரிசில் பரீட்சைகளில் அப்படி இல்லையே. இதில் மட்டும் ஏன் அப்படி?

இந்தப் போட்டிப்பரீட்சையில் சித்தியடைவது வசதியான பாடசாலையில அனுமதிபெறுவதற்கான தகைமை என்ற வாதமும் செல்லுபடியற்றதாகப் போய்விட்டது. As it is not in use it is abrogated) அது வழக்கொழிந்ததாகவே கருதப்படவேண்டும். அதற்கான பரிமாணங்கள் பரீட்சைக்குப் புறம்பாகவே உள்ளன.

இது ஒருவகைத் தரப்படுத்தல். இந்தப் பிரச்சினையை ஓர் அறைகூவலாக எடுத்துக்கொள்ள யார் முன்வரப் போகிறார்கள் என்பதை, பாதிக்கப்பட்ட மாணவர் சமுதாயம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு இருக்கிறது. என்பதை நாங்கள் தீர மறந்து விடக்கூடாது. ✧

## நெடுந்தீவில்

# வீதி விளக்குகள் இன்றி பொதுமக்கள் சிரமம்

நெடுந்தீவு,மார்ச் 3

நெடுந்தீவு பிரதான வீதிக்கு மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. இதனால், இரவுவேளைகளில் இந்த வீதியூடாகப் பயணஞ்செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

நெடுந்தீவு பிரதேச சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டபோது பிரதான வீதியில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன.

எனினும், மின்சார சபையினர் மின் விநியோகத்தைப் பொறுப்பேற்றதை அடுத்து பிரதான வீதிக்கு மின்விளக்குகள் பொருத்தப்படவில்லை.

இதுகுறித்து, மின்சார சபையினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-ரி)

## யாழ். தொழில் நுட்பக் கல்லூரி

# வருகைதரு விரிவுரையாளரின் கொடுப்பனவுகள் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச்3

யாழ்தொழில் நுட்பக் கல்லூரியின வருகை தரு விரிவுரையாளருக்கான கடந்த கால கொடுப்பனவுகளை வழங்க தொழில் நுட்பப் பயிற்சித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபர் எஸ்யோகராஜன் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

வருகை தரு விரிவுரையாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து வழங்கப்படவில்லை.

இதற்குத் திறைசேரியில் ஒதுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறை காரணம் என தொழில் நுட்பப்பயிற்சித் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இதனால் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியின் பகுதி நேர கற்கை நெறி மாணவர்களுக்கு விரிவுரை நிகழ்த்துவதற்கு விரிவுரையாளர்கள் தயக்கம காட்டி வந்தனர். இதற்குக் கடந்த வருடக கொடுப்பனவு வழங்கப்படாததே காரண மாகும்.

இது தொடர்பாக தொழில் நுட்பப் பயிற்சித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தெரிவித்ததை அடுத்தே கடந்தகாலக் கொடுப்பனவுகளை வழங்க சம்பந்தப்பட்ட பயிற்சித் திணைக்களம் இணங்கியுள்ளது - என்றார் அவர். (எ-6)



" தெய்வீகத் தேன் துளிகள் " என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா சமித்தியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நூல் பிரதி ஒன்றை வைத்திய கலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தியிடமிருந்து தொழிலதிபர் எஸ்.சுந்தரலிங்கம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வெளியான இலக்கிய நூல்களுக்கான பரிசுப் போட்டி

## பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்துகிறது

யாழ்ப்பாணம்,மார்ச்3

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களின் இலக்கிய நூல்களுக்கான பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

திருகோணமலையிலுள்ள பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ள இப்பரிசுத் திட்டத்தில் 2003ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அச்சில் வெளிவந்த நூல்களை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம், இலக்கிய ஆய்வும் விமர்சனமும், உயர்கல்வி ஆகிய துறைகளைச் சார்ந்த நூல்களையும் மேற்படி துறைகளைச் சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பிவைக்கமுடியும்.

நூல்களை எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் "உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைசசு, திருகோணமலை" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

(ம-8-ரி)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1942 - 06 - 17

மறைவு 2004 - 02 - 26

எமது சக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

வேலாயுதம் ரவிச்சந்திரன்

அவர்களின் பாசமிகு தந்தையார்

### வைரவிப்பிள்ளை வேலாயுதம்

அவர்கள் 26.02.2004 அன்று காலமானதையிட்டு பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.
வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
மருதங்கேணி. (சி-33535) (26-13-19)



## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
## இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
## வேத சிவாகம குருகுல கலாசாலை
## புதிய மாணவர்கள் அனுமதி - 2004

குருகுல கலாசாலையில் இந்த ஆண்டுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. இதில் விடுதி மாணவர்கள், தினசரி வருகை தரும் மாணவர்கள் வாரஇறுதிமாணவர்கள் என்ற மூன்று பிரிவுகளிலும் மாணவர்கள் கல்வி கற்க அனுமதியளிக்கப்படுவார்கள். விடுதி மாணவர்களின் விண்ணப்பங்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. இதுதவிர, ஆங்கில கணனி வகுப்புகளும், சிவாச்சாரியார்களுக்கான வைதிக வகுப்புகளும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே, அந்தண மாணவர்களும் விண்ணப்பப் படிவத்தை குருகுல காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் 20.03.2004 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

வைதிக வகுப்புகள் சிவஸ்ரீ ச.சோமஸ்கந்தகுருக்கள் (மயிலணி) அவர்களால் நடத்தப்படவுள்ளன.

பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா,
செயலாளர். (29142) (26-13-19)


யாழ்.சைவபரிபாலன சபையினர் நடத்திய

# சைவநெறித் தேர்வில் சித்திபெற்று பதக்கங்கள் பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ்சைவபரிபாலன சபையினரால கடந்த வருடம் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் சித்திபெற்று அகில இலங்கைப் பரிசில் பெறுவோர் விவரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் என்பன வழங்கப்படவுள்ளன என்று சைவபரிபாலன சபையின் தலைவரும், சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

முதலாம், 2ஆம், 3ஆம் இடங்களில் அகில இலங்கைப் பரிசில் பெறும் மாணவர்களின் பெயர், பாடசாலை விவரம் முறையே வருமாறு:-

**தரம் 2**

மயூரி கோபிநாத் (துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்), சிதம்பரநடேசன் குமரேசன் (மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்), தேவகரன் லக்ஸ்மன் (இணுவில் மத்திய கல்லூரி).

**தரம் 3**

திரியம்பகி சோமசேகரம் (இந்து ஆரம்பப் பாடசாலை), கிரிசனா சிவசுப்பிரமணியம் (சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்), தனபாலசிங்கம் கோகுலன் (கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்).

**தரம் 4**

சிவகுமார் மேகலாதன் (புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), அச்சுதை ஸ்ரீஸ்காந்தன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), பிரசாந்தினி பஞ்சலிங்கம் (இணுவில் இந்துக் கல்லூரி).

**தரம் 5**

யோகராசா துஷிகன் (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), சிந்துஜா நவரத்தினம் (கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை), சங்கீதா பாலசுப்பிரமணியம் (அத்தியார் இந்துக் கல்லூரி).

**தரம் 6**

முனீஸ்வரன் ஜனார்த் (உயிலங்குளம் றோ.க.த.க. பாடசாலை), கஜவதனி குலசிங்கம் (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), ஜெனா ரவீந்திரன் (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்).

**தரம் 7**

மதுரா பாலசுப்பிரமணியம் (மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை), மாதுமை சிவாஜி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), தர்சிகா செல்வராசா (யாழ்ப்பாணக் கல்லூரி).

**தரம் 8**

விவேகானந்தர் சுயந்தன் (கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), விஜிதா ஆறுமுகம் (வட இந்து மகளிர் கல்லூரி), நிவேதினி சண்முகநாதன் (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்).

**தரம் 9**

தர்சினி தேவராசா (கனகாம்பிகைக்குளம் அ.மி.த.க. பாடசாலை), நித்தியா கணநாதன் (விக்ரோறியாக் கல்லூரி), கல்யாணி இராஜதுரை (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

**தரம் 10**

அனுசுஜா ஆனந்தசிங்கம் (மகாஜனாக் கல்லூரி), பாலசுப்பிரமணியம் ஜனார்த்தனன் (இந்துக் கல்லூரி), துஷ்யந்தி தெய்வேந்திரன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**தரம் 11**

கலைவாணி கமலக்கண்ணன் (கம்பர்மலை அ.த.க. பாடசாலை), சாமந்தி வேலாயுதம் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தர்சியா ஞானயோகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**தரம் 12 (இந்து நாகரிகம்)**

நிதர்சனா பரஞ்சோதி (திருக்குடும்பக் கன்னியர்மடம்), அனோஜனா ஸ்ரீமகாதேவன் (இந்து மகளிர் கல்லூரி), தட்சணாமூர்த்தி அன்புவடிவேல் (யூனியன் கல்லூரி).

**தரம் 12 (இந்துசமயம்)**

ரதீபா இராசேந்திரலிங்கம் (இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), ரோகினி சதாசிவம் (வட்டக்கச்சி மகா வித்தியாலயம்), குகப்பிரியா பரராஜசிங்கம் (நயினாதீவு மகா வித்தியாலயம்).

**தரம் 13 (இந்துநாகரிகம்)**

தாட்சாயினி சந்திரகுமாரன் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), லஜிதா இரவீந்திரநாதன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மயூரவதனி இராசரத்தினம் (இராமநாதன் கல்லூரி).

**தரம் 13 (இந்துசமயம்)**

பிரியதர்சினி காளிதாஸ் (திருவையாறு மகா வித்தியாலயம்), மேனகா மகாதேவன் (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), யோக கௌரி கதிரேசபிள்ளை (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

(எ-9)


## தேவை


ஹெலோ டிரஸ்ற் நிறுவனத்துக்கு களஞ்சியக் காப்பாளர் (Store keeper) தேவை. இப்பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தரமான முன்னனுபவமுள்ள, வயது 25- 40 இற்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதி: 10-3-2004

Administrator,
The Halo Trust,
655,Navalar Road,
Jaffna. (26-19-18) (29141)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 - 08 - 1911

மறைவு 15 - 03 - 2003

### வேலன் சின்னையா

திதி: துவாதசி 03.03.2004

அன்பும் அறமும் கொண்டெமை வளர்த்தீரே!
பாசமாய் வழி நடத்திச் சென்றீரே!
நீண்ட நெடும் பயணம் சென்றாலும்
தூண்டாமணி விளக்காய் துலங்குகிறீர் எம்மனதில்!

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (29135)(13-19-26)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
செல்வரத்தினம் குடும்பத்தினர்.



## உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்!

15.02.2004 அன்று நடைபெற்ற
எமது அன்பு மகள்
செல்வி

### சோபனா புலவர்



அவர்களின் அரங்கேற்ற நிகழ்விற்கு வருகைதந்து சிறப்பித்த சமயப்பெரியோர், கல்விமான்கள், கலைஞர்கள், கலாரசிகர்கள், பெரியோர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இவ்விழாவிற்கு வருகைதந்து பெருமை சேர்த்த முதன்மை விருந்தினர்களுக்கும் அருளாசியும் வாழ்த்துக்களும் தெரிவித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறைவன் அருளிய பரதக்கலையை எமது மகள் பயில்வதற்கு ஆரம்ப குருவாக இருந்த **திருமதி நளாயினி இராஜதுரை** அவர்களுக்கும் மற்றும் எமது மகள் அரங்கேற்றம் காண்பதற்குக் குருவாக இருந்து அவரை நெறிப்படுத்தி ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து அயராது உழைத்த **கொக்குவில் கலாபவன ஆசிரியை திருமதி சாந்தினி சிவநேசன்** அவர்களுக்கும், கலைஞர்களுக்கும், நுண்கலைப்பீட ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும், புகைப்படக் கலைஞர்களுக்கும், ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும், இலைமறைகாயாக இருந்து உதவிபுரிந்த அனைத்து ஊழியர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

"புலவர் வீடியோ",
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

திருமதி ஜெயவதி புலவர்,
ரஸீஸ், ரஞ்சித், ரமேஸ்
(சகோதரர்கள்).

(29143) (26-13-19)



## மரண அறிவித்தல்

### கந்தையா ஆறுமுகம் (கிளாக்கர்)



கரணவாய் மத்தி, குளவியடி அம்மன் கோயில், நவிண்டில், கரவெட்டியைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் 01.03.2004 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அசுபதி தம்பதியினரின் தவப்புதல்வனும் காலஞ்சென்ற பூரணத்தின் பாசமிகு கணவரும் பிரபா (சுவிஸ்), ரவீந்திரன் (லண்டன்), சபேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பாஸ்கரன் (சுவிஸ்), காலஞ்சென்ற இரத்தினாதேவி (லண்டன்), ராதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தங்கம்மாவின் சகோதரனும் கந்தசாமி, காலஞ்சென்றவர்களான இராசம்மா, கந்தையா (சுந்தரம் மாஸ்ரர்) ஆகியோரின் மைத்துனரும் மினோலினி, காயத்திரி, சுஜன், சாருகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல சட்டத்தரணியும், நொத்தாரிசுமான G.V.சுப்பிரமணியம் அவர்களின் லிகிதராகவும் பிரபல சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய பொ.குமாரசாமி அவர்களின் லிகிதராகவும் கடமையாற்றிப் பின்பு கொழும்பில் பிரபல சட்டத்தரணி லிகிதராகக் கடமையாற்றியவராவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2004) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

குளவியடி அம்மன் கோயில்,
கரணவாய் மத்தி, நவிண்டில்,
கரவெட்டி.

தகவல்:
சி.தங்கவேல் (சகோதரன்)
கேம்பிறிஜ் கலாசாலை,
நவிண்டில்.

(சி-33534)(40-19-18-26)

# யாழ். மாவட்டக் கூட்டுறவு அமைப்புகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூ. 12 கோடி!

## பிரதமர் அலுவலகம் ஒதுக்கியுள்ளது

அரியாலை,மார்ச்3

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு அமைப்புக்களின் இவ்வாண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கென 12 கோடியே 50 லட்சம் ரூபாவை பிரதமர் அலுவலகம் ஒதுக்கியுள்ளதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கு 10 கோடி ரூபாவும், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பனை வெல்லம் உற்பத்தி, பனங்கள் போத்தலில் அடைத்தல் ஆகியவற்றுக்கு 2 கோடி 50லட்சம் ரூபாவும் பிரதமர் அலுவலகத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்புக்கள் இவ்வாண்டு மேற்கொள்ளவுள்ள கருத் திட்டங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் அலுவலகம் கூட்டுறவுத் திணைக்களத்தைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ம-8-17)

# பனை, தென்னை வள கூ. சங்க பணியாளருக்கும் ஊதிய உயர்வு

அரியாலை,மார்ச்3

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ள ஆயிரத்து 250 ரூபா சம்பள அதிகரிப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி.

யாழ். மாவட்டத்தில் உள்ள மேற்படி சங்கங்களில் பணியாற்றும் சுமார் 530 பணியாளர்களுக்கும் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இந்தச் சம்பள அதிகரிப்பு அமுல்படுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். (ஐ-17)

### யாழ். மாவட்டக் கூட்டுறவு

# உதவி ஆணையாளர் பணிமனைக்கு வாகன வசதி செய்யப்படவில்லை

அரியாலை,மார்ச்3

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கான வாகன வசதி வழங்கப்படாததால் அலுவலகப் பணிகளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அலுவலகத்திற்கு வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தினால் முன்னர் 'பிக் அப்' வாகனம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. ஆனால், பின்னர் அந்த வாகனத்தைக் கூட்டுறவுத் திணைக்களம் மீளப் பெற்றிருந்தது. அது பின்னர் இங்கு திருப்பி அனுப்பப்படவில்லை என்று உதவி ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சாரதி ஒருவர் பணியில் இருந்தும் வாகன வசதி இல்லாததால் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அதிகாரிகள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் சென்றே திணைக்களக் பணிகளைச் சிரமப்பட்டு மேற்கொண்டு வருகின்றனர் (ஐ-17)

# குடாநாட்டு வைத்தியசாலைகளுக்கான காலாண்டுக்குரிய மருந்து வகைகள் ஒரே தடவையில் வந்து சேர்ந்தன

சுகாதார அமைச்சின் மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஆகியவற்றுக்கான இவ்வருட முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

மிக நீண்ட காலத்தின் பின்னர் சுகாதார அமைச்சின் மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து நேரடியாக பெருமளவான மருந்துவகைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் யாழ்.சுகாதாரத் திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

வைத்தியசாலைகள் பலவற்றில் மருந்துத் தட்டுப்பாடு நிலவியதையடுத்து யாழ் சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் விடுத்த பணிப்புரைக்கமைய களஞ்சியத்தில் உள்ள மருந்து வகைகளைக் களஞ்சியப் பிரிவினர் விநியோகித்து வருகின்றனர்.

கடந்த வாரம் கோண்டாவில், கொக்குவில், தெல்லிப்பழை, அளவெட்டி, சுன்னாகம், ஏழாலை, மானிப்பாய், சங்கானை, உடுவில், இணுவில் ஆகிய இடங்களில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு ஏற்கனவே மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு இவ்வாரம் மருந்துகள் விநியோகிக்கப்படவுள்ளன. (ம-8-135)

# மாணவர்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு கல்வித்துறைசார் அதிகாரிகளின் கைகளிலே

## கல்விப்பணிப்பாளர்களுடனான சந்திப்பில் செம்மணன்

யாழ்ப்பாணம்,மார்ச்3

மாணவர்களை நேரிய பாதையில் வழிநடத்த வேண்டிய பொறுப்பு கல்வித்துறைசார் அதிகாரிகளின் கைகளிலேயே உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

கடந்த 17ஆம் திகதி யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற கல்விப் பணிப்பாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஏ-9 பாதை திறக்கப்பட்டது. ஆயினும், எம் மக்கள் மத்தியில் இயல்பு நிலை இன்னும் தோன்றவில்லை.

இந்த யுத்தநிறுத்த சூழ்நிலையில் மாணவர்கள் தம் கல்வியைக் கண்ணெனக் கொண்டு கற்கவேண்டும். ஆனால், இன்று அவர்கள் தவறான வழியில் ஒழுக்கமற்றவர்களாகவும், வன்முறையில் நாட்டம் கொண்டவர்களாகவும் மாறி வருகின்றனர்.

எனவே, மாணவர்களின் தவறான வழிகளை சீர்படுத்தி ஓர் நேரிய பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டிய ஓர் தார்மீகக் கடமை யாழ். குடாநாட்டிலுள்ள கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளின் கைகளில் தங்கி உள்ளது என்றார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் சமகால அரசியல் நிலைப்பாடு, யாழ்.மாவட்ட கல்வி அபிவிருத்தி உட்பட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன், ஐந்து வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (ம-8-ரி)

# இருபாலைப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

## தடுப்பதற்கு விழிப்புக் குழுக்கள்

வலி.கிழக்கு,மார்ச்3

இருபாலைப் பகுதியில் கடந்த சில நாள்களாக இரவு நேரங்களில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளமையினால் அப்பகுதிகளில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரவில் திருடர்கள் பலவழிகளிலும் தமது திருட்டு யுக்திகளைக் கையாண்டு திருட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். திருடர்கள் கடந்த வாரம் இப்பகுதியிலுள்ள பல வீடுகளில் புகுந்து திருட்டுக்களில் ஈடுபட்டபோதும் பெறுமதியான பொருள்கள் எதனையும் திருடமுடியாது போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நாளாந்தம் திருடர்கள் கால் நடையாகவும், சைக்கிள்களிலும் ஓட்டோகளிலும் உலாவிவருகின்றனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்துக, கிராம அலுவலர் தலைமையில் இருபாலை தெற்கு பிரிவில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ம-8-180)

# 'தமிழே என் உயிரே' இறுவட்டு சனியன்று வெளியீட்டு விழா

## பல்கலை மாணவர் உருவாக்கத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ். பல்கலைக்கழக மாணவன் ஆர்.கீதப்பிரியனின் இசை இயக்கத்தில் உருவான 'தமிழே என் உயிரே' என்னும் இசைத்தட்டு வெளியீட்டு விழா, எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ரி.திருக்குமரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். ஆசியுரையை யாழ். கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக் குழுவின் தலைவர் வணபிதா ஏ.ஐ. பேர்ணாட் அடிகளார் நிகழ்த்துவார்.

இசைத்தட்டின் வெளியீட்டுரையை நியூ வீணாகானம் இயக்குநர் வாசுகி ரங்கனும், இசைத்தட்டின் ஆய்வுரையை 'கலைஞான கேசரி' எம்.எஸ்.ஸ்ரீதயாளனும் நிகழ்த்துவர்.

நியூ வீணாகானம் இசை நிறுவனத்தின் வெளியீடான இந்த இசைத்தட்டில் இடம்பெற்றுள்ள பாடல்களை யாழ். பல்கலைக்கழக மாணவர்களான என்.தனுசுஜன், க.ஜெசீதன், ந.சத்தியவேந்தன் ஆகியோர் இயற்றியுள்ளனர். (ம-9)

### சந்தேகநபர்கள் பிணையில் செல்ல அனுமதி

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வான் ஒன்றில் சென்ற பெண் ஒருவரின் தங்க நகையைத் திருடிய குற்றச்சாட்டின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 இளைஞர்களையும் பிணையில் செல்வதற்கு மல்லாகம மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் அனுமதித்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபர்களான நீர்கொழும்பைச் சேர்ந்த சு.தமிழ்ச்செல்வன், என்.கரன், ந.சாந்தருபன், ஸ்ரீ.கஜன், பு.தேவதாஸ் ஆகிய ஐவரையும் தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட வானை 3 லட்சம் ரூபா பிணை முறியில் விடுமாறும் நதிவான் உத்தரவிட்டார். (ம-8-86)

### முருங்கையப்புலம் கிராமத்துக்கு மின்விநியோகம்

தெல்லிப்பழை,மார்ச்3

வடக்கு - கிழக்கு மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை நிதி உதவியின் கீழ் வலி.வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முருங்கையப்புலம் கிராமத்துக்கு புதிதாக மின் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

2004ஆம் ஆண்டு மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை நிதித்திட்டத்தின் கீழ் இக்கிராமத்திற்கான மின்விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 10லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், விரைவில் இக் கிராமத்திற்கு மின்வழங்குவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலி.வடக்குப் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார். (ம-8-150)

### வாகனச் சக்கரத்தில் நாய் சிக்கியதால் விபத்து!

சக்கரத்தில் நாய் சிக்கிக்கொண்டதால் மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறி வீழ்ந்ததில் அதனைச் செலுத்தியவர் காயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் பளை துணைவிழுந்தான் பாலத்திற்கு அண்மையில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் காயமடைந்த கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சந்திரசேகரம் கிருபாகரன் (வயது31) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

### பனங்கள்ளுக்கு விலை நிர்ணயம்

பனங்கள்ளின் பருவகாலம் ஆரம்பமாகியிருப்பதை அடுத்து அதற்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் போத்தல் ஒன்றுக்கு 20 ரூபாவாக விற்கப்பட்டிருந்த பனங்கள்ளுக்கு மூன்று ரூபா குறைக்கப்பட்டு தற்போது 17 ரூபாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## காலத்தின் பதிவு



சொந்த அலுவல்களைத் தானே பார்க்கவேண்டும் என்பதால்... யாழ். செயலகப் படிகளில்...! (படம் : தீபன்)

### மீனவர்களுக்கு கடனடிப்படையில் படகுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்3

யு.என்.டி.பி. நிறுவனமும், 'சீடா' நிறுவனமும் இணைந்து மீனவர்களுக்கான சுயதொழில் முயற்சிக் கடன் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கடற்றொழிலாளர் சமாசங்களினூடாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கண்ணாடி இழைப் படகினை மீனவர்கள் 50 ஆயிரம் ரூபா பணம் செலுத்தி பெற்ற பின்னர் மிகுதிப் பணத்தைத் தவணை அடிப்படையில் செலுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக புங்குடுதீவு, பருத்தித்துறை, குருநகர், பொலிகண்டி, இன்பருட்டி, பலாலி, மயிலிட்டி, முனை, உயரப்புலம் ஆகிய கடற்றொழிலாளர் சமாசங்களுக்கு ஒவ்வொரு சமாசத்திற்கும் தலா ஐந்து படகுகள் என்ற அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-8-ரி)

### மைதானத்தில் சிரமதானம்

அரியாலை,மார்ச்3

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் விளையாட்டு மைதானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் துப்பரவுசெய்யப்பட்டது.

விளையாட்டு மைதான சுற்றாடல் பகுதியில் வளர்ந்திருக்கும் புதர்கள், பற்றைகள் போன்றவற்றை சனசமூக நிலைய இளைஞர்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். (ஐ-17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் யா/நாகேஸ்வரி வித்தியாசாலையில தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2003இல் சித்தியடைந்த மாணவச் செல்வங் களையும் அவர்களுக்குச் சிறப்பான பயிற்சி வழங்கிக் கல்வியறி வூட்டி வழிகாட்டிய வித்தியாசாலை அதிபர், ஆசிரியர்களையும் நாம் மனமுவந்து பாராட்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.




(இடமிருந்து வலம்) கே.சரண்சுதன் -126 புள்ளிகள், ரி.ஜெனிஸ் -128 புள்ளிகள், ரி.டினேஸ்குமார்-128 புள்ளிகள், வை.பிரியங்கா-157 புள்ளிகள், எஸ்.தக்சாயினி-135 புள்ளிகள், ரி.தர்சிகா-143 புள்ளிகள், பி.வைஸ்ணவி-148 புள்ளிகள், எஸ்.லக்சிகா-130 புள்ளிகள் ஆகியோரையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர் களையும் அதிபர் அவர்களையும் படத்தில் காண்கிறீர்கள்.

வாழ்த்துவோர்:
அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையம்,
அறிஞர் ஐயன்னா முன்பள்ளி,
அறிஞர் ஐயன்னா விளையாட்டுக்கழகம்
மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

யா/நாகேஸ்வரி வித்தியாசாலை.
சுன்னாகம்.
(C/33539) (41-12-18)

---

# POSH

திருமலை POSH நிறுவனத்தின் வழிகாட்டலில் யாழ் POSH நிறுவன மாணவர்களால் நடத்தப்பட்ட அழகுக்கலைக் கண்காட்சியும், மணப் பெண் அலங்காரக் காட்சிகளும் நடைபெற்ற மறுதினம், திருமலை POSH நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட இலவசக் கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்களுக்கானதும், புதிதாக இணைய விரும்பும் மாண வர்களுக்கானதுமான,

**புதிய வகுப்புகள்**

ஆரம்பம்: 19.03.2004
இடம் : ✳ **KAJI BEAUTY PARLOUR**
கோண்டாவில் - இருபாலை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(ஆசிரிய கலாசாலைக்கு அருகில்)
தொலைபேசி இல.- 021 222 3310
✳ **ROSE ARTS**
ஒலி, ஒளி, ஒலிப்பதிவு அமைப்பாளர்
இல. - 05, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம் (திருமறைக் கலாமன்றத்துக்கு அருகில்)
தொலைபேசி இல. - 021 222 6146

**பயிற்சி வகுப்புகள்**

பகுதி நேரம் - 2 மாதம்
முழுநேரம் - 10 நாள்கள்
சைனீஸ் சமையற்கலை - ரூ. 3,000/=
12 Facials - ரூ. 2,500/=
Dip. in Beauty Culture - ரூ. 7,500/=

- ✦ பயிற்சியில் பங்குபற்றும் அனைவருக்கும் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
- ✦ பதிவுகள் யாவும் 'உதயன்' பணிமனையிலும் மேற்குறிப்பிட்ட இரு இடங்களிலும் மேற்கொள்ளப்படும்.
- ✦ மேற்குறிப்பிட்ட வகுப்புகள் யாவும், வட - கிழக்கில் பிரபல அழகுக் கலை நிபுணர்,

**திருமதி மிதுனா ஆனந்தரமணனினால்**
மேற்கொள்ளப்படும (Comsetologist cum Beauty Therapist)
(இலங்கை, இந்திய முறைகளில் )

மேலதிக தொடர்புகளுக்கு:
தொலைபேசி இல :- 077 6167729
026 2224524
(C/33542) (41)

---

# பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06
10
1933



மறைவு
22
02
1994

**அமரர் முத்துக்குமாரு மயில்வாகனம்**

அப்பா வருடங்கள் பத்துக் கடந்துவிட்டாலும்
எங்களை வருடிச்செல்லும் உங்கள்
ஞாபகங்கள் இன்னும் வற்றிவிடவில்லை!
எங்கள் கண்களில் உங்களைக் காணவேண்டுமென்ற
ஏக்கம் இன்றும் குறைந்துவிடவில்லை!
உங்கள் நினைவுடனேயே நாம் இங்கு வாழ்கிறோம்!

டச்சுவீதி,
கோப்பாய் தெற்கு.
(29186) (40-12-39-24)
துயருறும்:
குடும்பத்தினர்.

---

**மீண்டும் சாவகச்சேரியில்!!**

**லக்ஷ்மி**
ல் மூக்குக் கண்ணாடி அகம்
இல:18, கச்சாய் றோட், சாவகச்சேரி.

- ✦ தங்கப்பல் கட்டுவதற்கு
- ✦ சங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- ✦ மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்
- ✦ மலிவு விலையில் கண்ணாடிகளைப் பெறவும்
- ✦ நவீன சண்கிளாஸ் பெற்றுக் கொள்ளவும்.

(29185) **லக்ஷ்மி** (39-12-24)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு.கே.சின்னராஜா B.A., J.P.**
(பிரதிமுகாமையாளர், மக்கள் வங்கி)



வட அல்வாயைச் சேர்ந்த திரு.கே.சின்னராஜா அவர்கள் அண் மையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், வலிகாமம் கிழக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராகவும் மேல் நீதிமன்றில் எழுதுவினைஞராகவும் கடமையாற்றியுள்ளார். பல சமூக, சமய நிறுவனங்களில் பணி புரியும் இவர் சிறந்த கலை இலக்கியப் படைப்பாளியாவார். மேலும் இவரது பணி கள் தொடரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அல்வாய் இலக்கிய வட்ட
நண்பர்கள்.
(29155) (26-12-18-24)

---

# மகிழ்ச்சியுடன் மனமுவந்து வாழ்த்துகின்றோம்


## ஸ்ரீபரமானந்த சிறார் முதியோர் இல்ல ஆச்சிரமத்தின் தர்மகர்த்தாக்கள் மூவர்



**Dr.ந.பத்மநாதன்**
தலைவர்



**திரு.மு.சுந்தரலிங்கம்**
நிர்வாக செயலாளர்



**திரு.த.அரிப்பிரசாதம்**
உபபொருளாளர்

அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவான்களாகப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு மகிழ்ச்சியு டன் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அனைவரதும் சேவைகள் மேன்மேலும் சிறப்புற இறைஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீபரமானந்த ஆச்சிரமம்,
வதிரி,
கரவெட்டி.
(C/33541)
தர்மகர்த்தா சபை,
இல்லச் சிறார் - முதியோர், உத்தியோகத்தர்கள்.
(12-24-39)

---

Jayoda **ஜயோதா** ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல 6092128 முதல் 6106566 வரை
சீட்டிழுப்பு இல.11 திகதி 01-03-2004

வெற்றி எண்கள் **7 6 5 4 1 4** சுப்பர் எண் **3**

சுப்பர் ஜக்பொட் பரிசு **13,955,650/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் பெற்றோர் | வெற்றி தொகை | பரிசுத் | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 13,955,650/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 600,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 127 | 5,000/- | 635,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,277 | 500/- | 638,500/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 12,771 | 50/- | 638,550/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 126,533 | 10/- | 1,265,330/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 16 | 5,000/- | 80,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 126 | 1,000/- | 126,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,273 | 100/- | 127,300/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 12,654 | 20/- | 253,080/- |
| மொத்தம் | 154,791 | | 6,363,760/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.6,363,760/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட் ரூ.**14,310,675/-**

தொடர் இல. 7069147க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மார்ச் 04ம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6093402-5-04
6105572-6-64
6100042-5-60
6098594-7-41
6099757-2-89

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செஸ்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

# பாரம்பரியக் கலைகளுக்கு மறுவாழ்வு அளித்த தமிழீழத் தேசிய விளையாட்டு விழா

ஒரு நாட்டின் தேசிய விளையாட்டு விழா எவ்வாறு ஒழுங்கமைக்கப்படுகிறதோ அதற்கு நிகராக - குறைந்த ஆளணி, பல வசதியீனங்களுக்கு மத்தியிலும் - தமிழழீத் தேசிய விளையாட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டு நடந்து முடிந்துள்ளது.

இந்த நாட்டில் ஆட்சியில் இருந்த அரசுகள் தமிழ் மக்களை பொருளாதார, அரசியல் ரீதியாக அடக்கி ஆண்டது போன்று விளையாட்டிலும் தமிழ் மக்களைப் புறக்கணித்தனர். கடந்த காலங்களில் எமது மண்ணில் இடம்பெற்ற கொடூரமான யுத்தங்களால் தமிழ்களால் தமது விளையாட்டுத் திறனை விருத்திசெய்ய முடியவில்லை. அரசினால் நடத்தப்பட்ட தேசிய விளையாட்டு விழாவிலும் தமிழ் வீர, வீராங்கனைகள் புறக்கணிக்கப்பட்டு வந்தனர்.

இதனால் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள வீரர்களின் திறமைகள் முடக்கப்பட்டன. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், விளையாட்டுத்துறையின் மூலம் எமது வீரர்களின் திறமையை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துவதற்குமாகவே தமிழீழ விளையாட்டுத்துறை ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பிக்கப்பட்ட பின் இதுவரை மூன்று தடவைகள் தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழாக்களை அது நடத்தியுள்ளது. அவற்றில் முதலாவது தேசியப் பெருவிளையாட்டு விழா 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் உள்ள மாவட்டங்களை ஒன்று சேர்த்து நடத்தப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதை அடுத்து கடந்த வருடம் தமிழர் தாயகப் பிரதேசத்தில் உள்ள யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி 2 ஆவது தேசியப் பெருவிளையாட்டு விழா நடத்தப்பட்டது.

**சிறந்த வீர வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டோர்**

- ★ உதைபந்தாட்டம் - சிறந்தவீரர்- அன்ரன் டெவிசன் (மன்னார்)
- ★ சிறந்த கோல்காப்பாளர்- வசந்தீபன் (கிளிநொச்சி)
- ★ கரபந்தாட்டம் (ஆண்) - சிறந்த வீரன் -ரீ.தபுகல (திருமலை) (பெண்) வீராங்கனை - எஸ். மொனிக்காகுமாரி (திருமலை)
- ★ கிரிக்கெட் வீரர் - எஸ் தனுஸ்காந் (யாழ்).
- ★ துடுப்பாட்டவீரர் எஸ்.ஜனார்த்தனன்.
- ★ கபடி ஆண் - சிறந்தவீரர் சந்திரசேகரன் (வவுனியா) (பெண்) சிறந்த வீராங்கனை - க.சுஜா (மட்டக்களப்பு)
- ★ கிளித்தட்டு (ஆண்) வீரர் - ஜெயசீலன் (கிளிநொச்சி) (பெண்) வீராங்கனை -மே.சுபாசினி (யாழ்)
- ★ வலைபந்து இ.நித்தியா (யாழ்)

இதில் கேணல் சங்கர் ஞாபகார்த்தமாக மென்பந்துக் கிரிக்கெட், மேஜர் சோதியா ஞாபகார்த்தமான வலைப்பந்தாட்டம், லெப்கேணல் விக்ரம் ஞாபகார்த்தமான உதைபந்தாட்டம், மேஜர் அல்பேட் ஞாபகார்த்தமான கரபந்தாட்டம் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன.

இம்முறை மேற்குறிப்பிட்ட போட்டிகளுடன் லெப்.சதா ஞாபகார்த்த பெண்களுக்கான கரபந்தாட்டம் லெப்.கேணல் சந்திரன் ஞாபகார்த்தமான ஆண்களுக்கான கபடிப்போட்டி கப்டன் அன்பரசி ஞாபகார்த்த பெண்களுக்கான கிளித்தட்டு, லெப் கேணல் புலேந்தி அம்மான் ஞாபகார்த்தமான ஆண்களுக்கான கிளித்தட்டு மற்றும் கப்டன் திலகா ஞாபகார்த்தமான பெண்களுக்கான கபடி என்பன சேர்க்கப்பட்டிருந்தன.

கடந்த முறை நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இம்முறை முதன் முதலாக தோற்பந்து கிரிக்கெட்டாக மாற்றப்பட்டது.

மூன்றாவது தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழா கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதனை ஒட்டி கிளிநொச்சி நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. மைதானம் சிவப்பு, மஞ்சள் கொடிகளாலும் பலவகை நிறமுடைய மின்குமிழ்களாலும் அலங்கரிக்கப்பட்டு மைதானம் இருள் பகலாக மாற்றப்பட்டது.

கிளிநொச்சிக்கு மின்சார விநியோகம் இதுவரை வழங்கப்படாத நிலையிலும் அங்குள்ள பஸ்நிலையப் பகுதியில் இருந்து கந்தசாமி கோயில் வரை வீதி நெடுகிலும் மின் விளக்கு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

தேசியப் பெருவிளையாட்டு விழா தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை தேசியக் கொடியை ஏற்றிப் போட்டிகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அதற்கு முன்னதாக கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலில் இருந்து மாவீரர்களான கேணல் சங்கர், லெப்.கேணல் புலேந்தியம்மான், லெப்.கேணல் விக்ரர், லெப்.கேணல் சந்திரன், மேஜர் அல்பேட், மேஜர் சோதியா, கப்டன் அன்பரசி, கப்டன் திலகா, லெப்டினன்ட் சதா ஆகியோருடைய திருவுருவப் படங்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மைதானத்தை நோக்கி எடுத்துவரப்பட்டன.

ஒரு நாட்டின் தேசிய விளையாட்டு விழா நடைபெறும்போது அந்த நாட்டின் பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெறுவது வழமை.


அதேபோல, இந்தத் தேசியப் பெருவிளையாட்டு விழாவிலும் தமிழர்களின் பாரம்பரியத்தைச் சித்திரிக்கும் வகையில் சீனடி, சிலம்படி, கொம்பு சுழற்றுதல் போன்றவற்றை வீரர்கள் வீதி நெடுகிலும் நிகழ்த்தியபடியே வந்தனர். அவர்களைத் தொடர்ந்து போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த வீரர்கள் தமது மாவட்டங்களின் பெயர் பொறிக்கப்பட்ட அட்டைகளின் பின்னால் அணிவகுத்தனர்.


தமிழர்களின் பாரம்பரியத்தைச் சித்திரிக்கும் சீனடி, சிலம்படி, தீப்பந்தம் சுற்றுதல் என்பன இந்த விளையாட்டுப் போட்டியில் காட்சியாக்கப்பட்டன. பயன்பாட்டில் இருந்து மறைந்துவரும் இத்தகைய விளையாட்டுக்களுக்கு இது மறுவாழ்வை அளித்துள்ளது.

இந்தக் கலையை அழியவிடாது பாதுகாப்பதில் பொலிகை சிவலிங்கம், பருத்தித்துறை கணேசமூர்த்தி ஆகியோர் முன்னின்று செயற்பட்டு வருகின்றனர். அவர்களால் பழக்கப்பட்ட மாணவர்களே தேசிய விளையாட்டு விழாவில் தமது திறமையை வெளிக்காட்டினர். வயது முதிர்ந்தவர் முதல் சிறுவர்கள் வரை இதில் பங்கேற்றனர்.

தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் இதனை காட்சிப் போட்டியாக நடத்தியதன் மூலம் தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதனை அவதானிக்க முடிகிறது.

தினமும் ஒரே நேரத்தில் பல ஆடுதளங்களில் பலவகைப்பட்ட போட்டிகள் இடம்பெற்றன. கிளித்தட்டு (ஆண், பெண்), கரபந்து (பெண்), கிரிக்கெட், கபடி (ஆண், பெண்) என்பன பகலிலும் உதைபந்தாட்டம், கரபந்து (ஆண்) வலைபந்து என்பன இரவு மின்னொளியிலும் இடம்பெற்றன. ஒரே நேரத்தில் போட்டிகள் நடைபெற்றதனால் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது பார்வையாளர்கள் ஓடிஓடி நிகழ்வுகளைப் பார்வையிட்டனர்.





| மாவட்டம் | கிண்ணங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | முதலாவது | இரண்டாவது |
| யாழ்ப்பாணம் | 3 | 3 |
| திருகோணமலை | 2 | - |
| மன்னார் | 1 | 2 |
| மட்டக்களப்பு | 1 | 1 |
| வவுனியா | 1 | 2 |
| கிளிநொச்சி | 1 | - |
| முல்லைத்தீவு | 0 | 1 |
| அம்பாறை | 0 | 0 |

மூன்றாவது தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் கிண்ணங்களைப் பெற்றுக்கொண்ட மாவட்டங்களின் விவரம்

இந்தத் தேசிய விளையாட்டு விழாவில் முக்கியமாக கிரிக்கெட் போட்டியில் மூன்றாவது நடுவர் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

சர்வதேசப் போட்டிகளிலே இந்த மூன்றாவது நடுவர்முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், கிராமப் புறங்களிலும், மாவட்டங்களிலும் நடத்தப்படும் ஆட்டங்களில் இந்த முறை அறிமுகப்படுத்தப்படவில்லை. மூன்றாம் நடுவரின் தீர்ப்புக்கு, பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களைப் பெறமுடியாத நிலைமை காணப்படுகிறது.

இருந்தபோதும் பலத்த சிரமத்தின் மத்தியில் இதற்கென 6 தொலைக்காட்சிகள் மற்றும் சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் பயன்படுத்தப்பட்டன. இந்த நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியது.

மைதானத்தின் 6 முனைகளில் வீடியோப்படம் எடுப்பதற்கான கோபுரங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் மூன்றாம் நடுவரின் தீர்ப்புக்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மூன்றாவது தேசிய விளையாட்டு விழாவில் மூன்றாவது நடுவர் முறையை அறிமுகப்படுத்தியது போல அடுத்தவருடம் இடம்பெறும் தேசியப் பெரு விளையாட்டு விழாவில் மேலும் சில தொழில்நுட்பங்களைப் புகுத்தி தினமும் நடைபெறும் ஆட்டங்களை தொலைக்காட்சி மற்றும் வானொலிகள் மூலம் நேரடி ஒளி, ஒலிபரப்புச் செய்வார்கள் என்பது அசைக்க முடியாத உறுதி. அதற்கான நடவடிக்கைகளில் தமிழீழ விளையாட்டுத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். போட்டிகள் இடம்பெற்ற ஒவ்வொரு நாளும் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியேற்றும் நிகழ்வு இடம்பெற்றன. அப்போது போட்டிகளில் கலந்துகொண்ட சிங்கள முஸ்லிம் வீர, வீராங்கனைகள் எவ்வித பேதமும் காட்டாது தேசியக் கொடியேற்றப்படும் இடத்திற்கு வருகை தந்து கொடியேற்றலுக்கு மதிப்பளித்தனர்.

**வசந்தன்**

இதில் பெருமைப்படக்கூடிய விடயம் என்னவென்றால் மாவட்ட அணிகளில் பங்குபற்றிய வீரர்களில் சிங்களப் பொலீஸாரும் இடம்பெற்றிருந்தனர். அவர்களும் தேசியக் கொடியேற்றல் நிகழ்வு இடம்பெற்றபோது தமக்குரிய பாணியில் அதற்கு மரியாதை செலுத்தினர்.

இவ்வாறான விழாக்களை நடத்துவதன் மூலம் எமது மூன்று இனங்களுக்கிடையேயும் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி சகோதர பாசத்துடன் செயற்பட வழிசெய்யமுடியும். எதிர்வரும் காலங்களிலும் இத்தகைய விழாக்களை நடத்தி எமக்கிடையான நட்புறவை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

தற்போது இந்த விளையாட்டு விழாவின் மூலம் ஒவ்வொரு மாவட்ட அணிகளின் வீரர்களும் வெளிக்காட்டிய திறமைகளைக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான அணிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்குரிய பயிற்சிகளை வழங்குவதற்கும் விளையாட்டுத்துறை முயற்சி செய்யவேண்டும் அப்பொழுதுதான் எமது வீரர்களின் திறமைகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்தமுடியும். அத்துடன் இந்த மாகாணத்திலுள்ள மூவின மக்களும் ஒற்றுமையுடன் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி வாழமுடியும்.

நடந்து முடிந்த மூன்று தேசியப் பெருவிளையாட்டு விழாவையும் சிறப்பாக நடத்தி முடித்த தமிழீழ விளையாட்டுத்துறையினர் எதிர்வரும் காலங்களில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான போர்த்தேங்காய் உடைத்தல், சடுகுடு போன்ற விளையாட்டுக்களையும் ஒன்றிணைத்து நடத்தவேண்டும். ★



# தவக்காலச் சிந்தனை

## ஆக்குபவனே இறைவன்

**யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள்**
*(லூக்.11:32)*

ஆக்குபவர் இறைவன். அவர் அழிப்பவர் அல்லர். அழிவோ மனிதனின் ஆபத்தின் விளைவே ஆகும். அறிந்தும், அறியாமலும் மனிதன் குற்றம் புரிபவன். ஆயினும் வீழ்ந்தவர்கள் அழிவுகாணக்கூடாது என்பது தெய்வத்தின் ஏக்கமாகும். இறை அழைப்பின் குரலாக இஸ்ராயேல் மக்கள் சமூகத்தில் தோன்றியவர்கள் இறைவாக்கினர்.

**எட்டாம் நாள்**

அதேவரிசையில் இயேசுவும் ஓர் இறைவாக்கினராக மிளிர்ந்தார். அவரது சொல்லும் செயலும் உண்மையைச் சுட்டிக்காட்டும் மனச்சாட்சியாக விளங்கின. சிலர் செவிமடுத்து தம் வாழ்வை உருவாக்கினார்கள். வேறு சிலர் மறுதலித்து தம்மை அழித்துக்கொண்டனர். நாம் வளருவதும் தேயவதும் இறைவனது குரலுக்குச் செவிகொடுக்க எம் உள்ளக் கதவுகளைத் திறப்பதைப் பொறுத்தே அமையும். வாழ்வின் நிகழ்வுகளுக்கும் சந்திக்கும் நபர்களுக்கும் செவிமடுத்து இறைவன் அனுதினம் தரும் செய்தி என்ன என்று தரித்து நின்று ஆராய்பவர் தம்மைத்தாமே ஆக்கப்பாதையில் உருவாக்கும் சிற்பிகளாவர்.

**சுவாமி ஜீவா போல் அ.ம.தி.**

# திணைக்களத்தின் ஆலோசனைப்படி நெற்செய்கையில் அதிக விளைச்சல்

## மாதகல் விவசாயிக்குப் பாராட்டு

வலிகாமம்,தெற்கு,மார்ச்3

கீரிமலை கமநல சேவை நிலையத்தின் இவ்வருட பெரும்போகத்துக்கான நெல் அறுவடை விழா மாதகல் கிழக்குக் கிராமத்தில் உள்ள எஸ்தவராசா என்ற விவசாயியின் வயல் துண்டத்தில் நடைபெற்றது.

கீரிமலை கமநல சேவை விவசாய போதனாசிரியர் தலைமையில் நடைபெற்ற இவ்வயல் விழாவில் பெரும்பாக உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் மேற்கு விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர், விவசாயச் சம்மேளனப் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி விவசாயி, விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைப் படி தமது பேரும்போக நெற்செய்கையை மேற்கொண்டிருந்தார்.

விவசாயத் திணைக்களத்தினின் ஆலோசனைப்படி ஏரி 402 என்ற நாலரை மாத நெல்வர்க்கத்தை வயலில் விதைத்து உரிய காலத்தில் அளவான பசளைப் பிரயோகம் செய்தமையால், வரட்சி நிலவிய கால போகத்திலும் கூட நீர்ப்பாசனம் மேற்கொள்ளாமல் நல்ல விளைச்சலைப் பெற்றுக்கொண்டார்.

ஓர் ஏக்கருக்கு இதன்மூலம் விவசாயி தவராசா, இம்முறை 78 புசல் நெல்லை அறுவடை செய்துள்ளார்.

இவ்விவசாயி திணைக்கள சிபாசுககமைய விவசாயத்தை மேற்கொண்டு சிறந்த விளைவைப் பெற்றதையிட்டு பலரும் அவருக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ஐ-152)

## வயல் கிணற்றுக்குள் மோட்டார் சைக்கிள்!

தென்மராட்சி,மார்ச்3

நுணாவில், கொல்லங்கிராய் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள கிணற்றிலிருந்து புத்தம் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்று சாவகச்சேரி பொலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நெல் அறுவடைக்குச் சென்றவர்கள் வயல் கிணற்றுக்கள் மோட்டார் சைக்கிள் கிடப்பதைக்கண்டு பொலீஸாருக்கு அறிவித்தனர். இதனையடுத்து பொலீஸார் அதனை மீட்டுப் பொலீஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிளை அடையாளம் காண பொதுமக்களின் உதவியைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பீ.என்.அபேரத்ன நாடியுள்ளார்.

(ஒ-117)

# கண்ணீர் அஞ்சலி

எமது காரியாலயத்தின் பொறுப்பதிகாரி
திருமதி செ.விஜயரத்தினம் அவர்களின் பாசமிகு கணவரான

**இராமசாமி விஜயரத்தினம்**

(தலைவர், விவசாய பொறியியல்துறை, விவசாய பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களின் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்துகிறது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அமரருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய ஆராய்ச்சி நிலையம்,
விவசாயத் திணைக்களம்,
திருநெல்வேலி. (29187)(18-16-17)

உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

# இணுவில் பொதுநூலகம் - சனசமூக நிலையம்

## புனரமைக்கப்பட்ட இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டிய சிறப்புப் போட்டிகள்

★ மரதன் ஓட்டம் — ஆண்கள் மட்டும்
★ துவிச்சக்கரவண்டி ஓட்டம் — பெண்கள் மட்டும்-
★ துடுப்பாட்டம் — மட்டுப்படுத்தப்பட்ட 6 ஓவர்களைக் கொண்டது

*குறிப்பு : (உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கழகங்கள் மட்டும்)*

★ கரம்
★ சதுரங்கம்
} யாழ். மாவட்ட ரீதியில்

★ பேச்சுப்போட்டி
★ பொது அறிவுப்பரீட்சை
} உடுவில் கோட்ட பாடசாலைகள் மட்டும்.

*குறிப்பு : பாடசாலை ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.*

*மேலதிக விவரங்களை நூலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

| விளம்பர அனுசரணை | |
|---|---|
| ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ்<br>இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக,<br>இணுவில். | இராசம் அரிசி ஆலை<br>மின்சார நிலைய வீதி,<br>சுன்னாகம். |

ஸ்ரீ பரராஜ
சேகரப் பிள்ளையார் கோவில்.
இணுவில்.

இணுவில் பொது நூலகம்.

**விண்ணப்ப முடிவு திகதி - 12.03.2004**

(சி-33551)(31-16-17-18)

# தேவை

குமாரன் சுற்றுலா விடுதிக்கு பகல் பராமரிப்பு ஆள் ஒருவர் தேவை. 35 வயதிற்கு மேற்பட்டவராகவும மாநகர சபை எல்லைக்குட்பட்டவராகவும் இருத்தல் வேணடும். நேரில் வரவும.

*குமாரன் சுற்றுலாவிடுதி*
*67,ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(29188)

# தவறிவிட்டன

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணபிள்ளை சானுஜனின் அடையாள அட்டை (இலக்கம் 843110770V), பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவ அடையாள அட்டை என்பன அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் (28-02-2004) சனிக்கிழமை தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் சூரியா மருந்தகம், பஸ்நிலையம், அச்சுவேலியில் ஒப்படைக்கவும்.

T.P.: 0602 213202

(29177)

(40-24-16-18) தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

உ
சிவமயம்

# மங்களகரமான திறப்புவிழா

## சாவகச்சேரி நகரில் ஒரு புதிய உதயம்!

## பி(F)ரன்ஸ் கலர்லாப் அன் ஸ்ரூடியோ

✪ இன்று (03.03.2004) புதன்கிழமை காலை 6.30 மணிக்குக் குதூகல ஆரம்பம்!

✪ உங்கள் படச் சுருள்களைச் சகல அளவுகளிலும் டிஜிற்றல் முறையில் நவீன தொழில்நுட்பத்துடன் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.



**உடனே விஜயஞ் செய்யுங்கள்!**

இல.12, நவீன சந்தை மேல்மாடி,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(29190) (24-17-16-18)

பி(F)ரன்ஸ் கலர்லாப்
நிறுவனத்தினர்.

# யாழ். மகளிருக்கு ஓர் அரியவாய்ப்பு



யாழ். மண்ணில் முதன் முறையாக இந்தியாவின் பிரபல்யம் வாய்ந்த Praba's Institute of Beauty Theraphy & Health Care Management நிறுவனத்தின் இயக்குநரும் தியாகராஜர் Poly Technic இனதும் காமராஜர் பல்கலைக கழகத்தினதும் மூலிகை அழகுக்கலை துறையின் விரிவுரையாளருமான திருமதி பிரபாரெட்டி (M.A.,M.S) அவர்களும் அவரது குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள்.

★ 29.02.2004 ஞாயிற்றுக்கிழமையன்று நடந்து முடிந்த அழகுக்கலை பற்றிய இலவசக் கருத்தரங்கில் அழகுக்கலையை விரும்பி ஆர்வமாகப் பயில நூற்றுக் கணக்கானோர் கேட்டதற்கிணங்க 3 பிரிவுகளாக இவ்வகுப்புகளை நடத்தத் திருமதி பிரபாரெட்டி அவர்களும் அவர்களது குழுவினரும் தீர்மானித்துள்ளனர்.

★ ஒவ்வொரு பிரிவினருக்கும் 7 நாள் பயிற்சி வகுப்பும் உங்கள் புகைப்படம் பொறிக்கப்பட்ட பெறுமதிமிக்க சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

★★★ இப்பயிற்சி வகுப்பில் இணையவிரும்புவோர் இல.167, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம் 'யாழோசை விளம்பர சேவை' அருகில் உங்களுக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று யாழ்.மண்ணின் மாணவர்களுக்கான மிகக் குறைந்த கட்டணமாகிய ரூ.6000 ஐச் செலுத்தி உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

★★ அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

**இடம்: Y.M.C.A. கட்டடம் (கச்சேரிக்கு முன்பாக) இல.109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**காலம்: 06.03.2004 சனிக்கிழமை**

**நேரம்: காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை**

குறிப்பு: வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களின் நலன்கருதி வகுப்பு முடிவடைந்ததும் வாகன வசதி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு: தொலைபேசி: 024 4 589743
071 2346781
077 6070581

(29194)(18-16-17)

## தொழிலாளர் தேவை

1) உழவு இயந்திர சாரதி (Tractor Driver)

5 வருட அனுபவமுள்ளவர்கள் உடன் நேரில் சமுகந்தரவும். தகுந்த வேதனம் வழங்கப்படும்.

யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(29192)(37-14-16-31)


## கச்சாய் அரசினர் தமிழ் வித்தியாலய பழைய மாணவர் சங்கம்

வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

காலம் :- 2004.03.07 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- பி.ப. 3.00 மணி
இடம் :- சரஸ்வதி கேட்போர் கூடம்.

பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

பழைய மாணவர் சங்கம்.
கச்சாய் அரசினர் தமிழ் வித்தியாலயம்.

பா. ஜெகபவன்
செயலாளர்.

(29195)(31)

## துயர் பகிர்வு

எமது பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியை **திருமதி சு.ஞானகோபால்** அவர்களின் அன்புச் சகோதரர்

### ராஜநாயகம் சக்திகுமார்

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்..

(சி33555)(37-11-16-31)

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் பீடாதிபதியும், விவசாய இயந்திரவியற்றுறைத் தலைவருமாகிய

### இராமசாமி விஜயரத்தினம்

அவர்களது மறைவுச்செய்தியை அறிந்து அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய இயந்திரவியற்றுறை சிறப்புப் பிரிவு
12ஆம் அணி மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(29202)(37-11-16-31)

## கண்ணீர்க் காணிக்கை



விவசாயபீட முன்னாள் பீடாதிபதியும்,
விவசாய பொறியியல்துறைத் தலைவரும்,
எமது சங்க உறுப்பினருமான

**எந்திரி. இ.விஜயரத்தினம்** அவர்களுடைய

திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விவசாயபீட ஊழியர் நலன்புரிச்சங்க
விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி35553)(37-14-16-31)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் பாக்கியம்



ஆத்திகுடி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பாக்கியம் அவர்கள் நேற்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முன்னாள் யாழ் மாநகரசபை மின்சார ஊழியரான சி. இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா -சின்னாச்சி ஆகியோரின் அன்பு மகளும் மோகன் (ஜேர்மனி), புஸ்பராணி (சந்தி-ஜேர்மனி), ரத்தினேஸ்வரி (சுவிஸ்), உதயகுமார் (ஜேர்மனி), சத்தியபாமா (சுவிஸ்), சத்தியரூபி (சுவிஸ்), திவாகர் ஆகியோரின் அன்புத் தாயாரும் தனலட்சுமி (சுவிஸ்), திருநாவுக்கரசு (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசீந்திரா (ஜேர்மனி), ரத்தினசிங்கம் (ஜேர்மனி), யோகேஸ் வரன் (சுவிஸ்), கொசிகா (பிரியா - ஜேர்மனி), பிறேமநாத் (சுவிஸ்), சத்திய கரன் (சுவிஸ்), கிருசாந்தி ஆகியோரின் அருமை மாமியாரும் செல்வநாயகம் (சுவிஸ்), பவானி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தர்ஷனா, டனுஷன், டிலக்ஷன், கௌசிகன், கானுஜன், ஜெனிஷன், யென்சிகா, அகினா, நிகிலா, அபினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சதீஸ், அனோஜா ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*54/12, ஆத்திகுடி வீதி,*
*கந்தர்மடம் வடமேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
கணவர் - சி.இரத்தினம்.

(29207)(11-16-31)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 3

மாதகல் சென் ஜோசவ் மகாவித்தியாலயமும், மாதகல் நுணசை வித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வி.சுப்பிரமணியம் தலைமையில்இடம் பெறும் இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ம-5-95)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச் 3

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் சொ.பாலகிருஷ்ணன் கலந்துகொள்வார். (ம-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச் 3

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் சு.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (ம-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச்3

உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ஐ.விஜயகாந்தன் தலைமையில் பாடசாலை முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-10)

## தவறிவிட்டது

7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அனுசியா தனபாலன் என்பவருடைய தே.அ.அட்டை (இல.797572756v),விவசாயபீட பல்கலைக்கழக அ.அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் திருநெல்வேலியில் தவறிவிட்டது.

தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் இல.10A, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (T.P.-3195)என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

(29191)(14-16-31)


**நாகம்ஸ் சுன்னாகம்**

கொஞ்சிப் பேசலாமா? (ரீல்ஸ்)

5ஆம் திகதி முதல் டொல்பி ஒலிநாதத்துடன் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநேர வெளியீடாக

சரத்குமார், லைலா, வடிவேலு நடித்த



கம்பீரம்

தினசரி காட்சிகள்: 11.00. 3.00. 7.00. 10.00 (புதிய நேரம்)

உங்கள் ஆசனப் பதிவுகளுக்கு:

ரட்ணம்ஸ் பாட்டா
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2917,
021 222 7048.

நாகம்ஸ் பாட்டா
இல. 10, நவீன சந்தை,
சுன்னாகம்.
T.P.: 060 221 2779.

(C/33520) (31)

**லிபேட்டி** அச்சுவேலி

சரத்குமார், விக்ரம், குஷ்பு, தேவயானி நடித்த

விண்ணுக்கும் மண்ணுக்கும் (ரீல்ஸ்)

காட்சிநேரம்: 3.00, 7.00 (பு.நே.)

(C-33521)

**ராஜா யாழ்ப்பாணம்**

தனுஸ், அபர்ணா, கருணாஸ் நடித்த



சுள்ளான் (ரீல்ஸ்)

காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(C-33519) (12)

**நிரஞ்சனாஸ்** சங்கானை



அர்ஜுன், சிம்ரன், மனோரமா நடித்த

ஏழுமலை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு
BLOOD FEORT - 2
இரவு 8.45 (பு.நே.)

(C/33515) (12)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் பெரியதம்பி

புத்தூர் மேற்கைச்சேர்ந்த திருமதி பாக்கியம் பெரியதம்பி அவர்கள் நேற்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.சி.பெரியதம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை -வள்ளியம்மையின் மகளும் சின்னத்தம்பி -அன்னப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் அமரர் செல்லத்துரை, பறுபதம் ஆகியோரின் சகோதரியும் அமரர் சின்னம்மா, கனகசபை, வடிவேலு, சின்னம்மா குகதாசன் ஆகியோரின் மைத்துனியும் அமரர் மாணிக்கவாசகர், சிவஞானதேவி, சிவநேசதேவி (ஆஸ்திரேலியா), விக்னேஸ்வரன் (கனடா), குகானந்ததேவி (இந்தியா), திருஞானசம்பந்தர் (சம்பந்தர்), கலாரூபன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தாயாரும் சுவேந்திராதேவி, சாம்பமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியர்), பால்ராஜ் (ஆஸ்திரேலியா), விஜயலட்சுமி (கனடா), அருணாசலம்துரை, அமிர்தகௌரி, மாலினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும் அமரர் குமரேசன், மோகனகுமார், சாந்தகுமார், முரளிதரன், கல்பனா நீதன், கோபிராஜ், அபிநயா, சகானா, அநந்தன் ஆகியோரின் பேர்த்தியும் சிவானந்தமூர்த்தி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்), சிவானந்தராசா, சிவகருணாதேவி, சிவகௌரிதேவி, சிவகுணதேவி, (நியூஸிலாந்து), சிவலீலாதேவி (ஆசிரியை, ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி) ஆகியோரின் பெரிய தாயாரும் தெய்வநாயகி (லிகிதர்), சச்சிதானந்தம், சிவசாந்திதேவி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2004) புதன்கிழமை நண்பகல் 12.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிந்துசிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோவிலடி,*
*புத்தூர்.*

(29189)(14-16-31)

தகவல்:
பெ.திருஞானசம்பந்தர் (மகன்).

### இராமசாமி விஜயரத்தினம்



(விவசாய எந்திரவியற்றுறைத் தலைவர். யாழ். பல்கலைக்கழகம்)

கல்வியங்காட்டைச் சேர்ந்த எந்திரி. இராமசாமி விஜயரத்தினம் (விவசாய எந்திரவியற்றுறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்கள் நேற்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் இராமசாமி, திருமதி பவளம் இராமசாமி ஆகியோரின் அருமை மகனும் செல்வரத்தினம் (பொறுப்பு ஆராய்ச்சி உத்தியோகத்தர், விவசாய ஆராயச்சி நிலையம் - திருநெல்வேலி) அவர்களின் அருமைக் கணவரும் புருஷோத்தமன் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), ருத்திராஞ்சலி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயதேவி (லண்டன்), விஜயகுமார், விஜயராணி (லண்டன்), ஜெகஜோதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.23, செங்குந்தா வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(29203)(31-14-16)

தகவல்:
திருமதி செ. விஜயரத்தினம்,
இ. விஜயகுமார்.

### திருமதி கனகசிங்கம் சோதிப்பிள்ளை

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசிங்கம் சோதிப்பிள்ளை நேற்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் மனைவியும் கௌரீஸ்வரி (டென்மார்க்), சிவகுமார் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி, புவனேஸ்வரி (விரிவுரையாளர், யாழ். கல்வியியற்கல்லூரி), செல்வக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் இராசேந்திரன் (டென்மார்க்), கௌரி (சுவிஸ்), பரமேஸ்வரன், வேல்நிதி (கணக்காளர், பிரதேசசெயலகம், வேலணை), ஜமுனா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் திலஷ்சன், டிலுக்ஷன், தனுஷ், அனோஷ், வினோஷ், தனோஜா, ரதீஷன், தவீஷன், ஓவியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2004) வியாழக்கிழமை பகல் 11மணிக்கு உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ஒஸ்கா (வேம்பன்) வீதி,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

(29204)(37-14-16)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

### Dr.பொ. கணேசன் (MBBS)(SL),DPM(SL)

(நீர்கொழும்பு வைத்தியசாலை)

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. கணேசன் அவர்கள் 28.02.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா, திருமதி சரஸ்வதி பொன்னையா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மகனும் Dr.மானெல (குளியாப்பிட்டிய வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் மகேந்திரன் (ஜேர்மனி), விஜயகுமார் (இத்தாலி), திருஞானவதி (லண்டன்), சிவஞானவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் ஸ்ரெலா (ஜேர்மன்), ஜெகதாம்பிகை (இத்தாலி), மகேந்திரன் (இத்தாலி), ஜீவரட்ணம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.03.2004) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நீர்கொழும்பு பொது சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*45, எவ்லின் மாவத்தை,*
*டெம்பில் றோட், நீர்கொழும்பு.*
*T.P:031 2232040.*

(சி33550)(37-14-16-31)

தகவல்:
க.ஜெயச்சந்திரன் (மைத்துனர்).

### திருமதி செல்லத்துரை அன்னம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மடம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை அன்னம் நேற்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான செல்லத்துரையின் அன்பு மனைவியும் புஸ்பராணி, செல்வராணி, யோகராணி, ரவீந்திரன், மகாராணி, சாந்தகுமாரி (பிரான்ஸ்), தனராசா (கனடா), பிறேமாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவரான அருள் நேசராஜா மற்றும் எட்வேட்கிளி, நடராசா, வசந்தி - யேசுதாசன், சகாயராஜா, வனிதா (கனடா), காலஞசென்றவரான சென்யூட் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (03.03.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் இருந்து பிற்பகல் 4.00மணிக்கு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.9, பேக்கரி லேன்,*
*யாழ்ப்பாணம்.*

(29206)(37-14-16-31)

தகவல்:
செ.ரவீந்திரன் (மகன்).

# கட்சிகளின் செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் சந்திக்கின்றார்

கொழும்பு,மார்ச்3

பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல்கட்சிகளின் செயலாளர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தேர்தல் ஆணையாளர் சந்திக்கின்றார். தேர்தல் செயலகத்தில் நடைபெறும் இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு தேர்தல்பணிகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் கட்சிசெயலாளர்களை சந்திப்பது இதுவே முதன்முறையாகும். வாக்களிப்பை நேர்மையாகவும், நீதியாகவும் நடத்துவது குறித்து இக் கூட்டத்தில் விளக்கமளிக்கப்படும் என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. (க)

# இப்படியும் ஒரு பிரச்சினை!

தென்மராட்சி,மார்ச்3

மாவடட்டப் பனை தென்னை வள அபிவிருத்தி உதவி ஆணையாளரின் பணிப்பின்பேரில் கள்ளின் விலை 17 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் தொடக்கம் பனங்கள்ளின் விலை குறைக்கப்பட்ட போதிலும் தென்மராட்சிப் பகுதியில் உள்ள தவறணை ஒன்றில் பழைய விலைக்கே நேற்று கள் விற்பனை செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் கள்ளின் விலை குறைக்கப்பட்டதாக அறிந்த வாடிக்கையாளர்கள் தவறணை முகாமையாளரிடம் விலை குறைப்புப் பற்றிக்கேட்டனர். விலைக் குறைப்புக் குறைப்புக் குறித்து சங்கத்தில் இருந்து தனக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று முகாமையாளர் அப்போது கூறினார். இதனையடுத்து தவறணை முகாமையாளருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு மோதல் வரக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமடைந்தது. ஆனாலும் வீதியால் சென்ற சிலர் சம்பவத்தை அறிந்து அங்கு சென்று இரு பகுதியினரையும் கட்டுப்படுத்தினர். பின்னர் புதிய விலைக்கு கள்ளு விற்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

## மது விளம்பரங்களுக்குத் தடை விதிப்பு

தேசியத் தொலைக்காட்சியில் மதுபான விளம்பரங்கள் ஒளிபரப்பப்படுவதை நிறுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரா நாயக்க குமாரதுங்க உத்தரவு இட்டுள்ளார்.

இலங்கை -ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான கிரிக்கட் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பின்போது மதுபான விளம்பரங்கள் ஒளி பரப்பப்பட்டன.

மதத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்பினர் இத்தகைய விளம்பரங்களைத் தடைசெய்யுமாறு ஜனாதிபதியும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையும் கேட்டிருந்தனர்

இதனையடுத்தே ஜனாதிபதி மதுபான விளம்பரங்கள் ஒளிபரப்பப்படுவதை நிறுத்துமாறு ரூபவாகினி கூட்டுத்தாபனத் தலைவரைப் பணித்துள்ளார். (ஒ-ரி)

## கூட்டம் ரத்து

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர் ஒன்றியத்தினால் இன்று புதன்கிழமை நடத்தப்படவிருந்த கூட்டம் இன்று நடைபெறமாட்டாது என்று ஒன்றியத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-10)

## மிதிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டு அதை அழிப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டபோதே மிதிவெடி திடீரென வெடித்ததாகக் கூறப்படுகிறது. காயமடைந்த இருவரும் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-15)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டின் பேரில் இவர்களுக்கு எதிராக யாழ்.நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்படவிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.நகரப்பகுதியில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல்பிரசாரச் சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கைகளில் பொலீஸார் நேற்று ஈடுபட்டனர். (ஓ-4-7)

## மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டியல் சமர்ப்பித்தவர் பின்னர் தாமாக தேர்தலில் இருந்து விலகுகிறார் என அறிவித்தாலும் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இருந்து அவரது பெயர் விலக்கப்படமாட்டாது.

தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் உரையாற்றுகையிலேயே இத்தேர்தல் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு எனக்கூறினார். திருமலை சுந்தா தலைமையில் இந்தப் பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இங்குதொடர்ந்து பேசிய சம்பந்தன் கூறியதாவது.

தமிழ்மக்கள் நீதியான, நியாயமான உரிமைகளைப்பெற்று கௌரவத்துடன் வாழ்வதற்கு வகைசெய்யும் விதத்தில் இடைக்காலவரைபுத் திட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்து, அதுதொடர்பான பேச்சுக்களை மேற்கொள்ள முனைந்திருந்தனர் அவ்வேளையிலேயே, ஜனாதிபதி மூன்றுமுக்கியமான அமைச்சுக்களின் பொறுப்புக்களை கையேற்று சிக்கலான அரசியல்சூழ்நிலையை உருவாக்கினார். இந்தநிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதனைத் தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பியுடன் இணைந்துகொண்டது. நான்கு வருடகாலத்தில் மூன்று பொதுத்தேர்தல்களை எதிர்நோக்கும் சூழ்நிலையும் உருவானது. இந்தத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமன்றி வடக்கு-கிழக்கு முழுவதிலும் நாம் அமோக வெற்றிபெறவேண்டும். இவ்வாறு 22இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற ஆசனங்களை நாம்பெற்றுக் கொள்ளும்போது எமது அரசியல்ரீதியிலான பலம் அதிகரிக்கும்.

எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் பேரினவாதக் கட்சிகளினால் போதிய ஆசனங்களைப்பெறமுடியாது. இன்றைய அரசியல் நிலைவரம் இதுதான். இந்த நிலையில் அரசியல்ரீதியாகவும் நாம் எமது செயற்பாடுகளை மேலும் முன்நோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும்.

எனவே ஒவ்வொரு வாக்காளனும் இன்றைய காலகட்டத்தின் முக்கியத்துவம் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும் அதன்அடிப்படையில் செயற்படவேண்டும் இதன் மூலம் எமது குறிக்கோளை, இலட்சியத்தை வெகு இலகுவாக அடையமுடியும்.-

இவ்வாறு அவர் கூறினார். (க)

## தமிழ்க் கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படாத வகையிலும் மேற்கொள்வது தொடர்பாகச் சிரேஷ்ட பொலீஸ்அத்தியட்சகருடன் கலந்துரையாடுவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரப் பணிக்காக ஊடகப்பிரிவு ஒன்றை அமைப்பது என்றும், இந்தப்பிரிவில் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார், கஜேந்திரன் ஆகியோர் இடம்பெறுவர் என்றும் கூட்டத்தில் மேலும் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-3-ரி)

## வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்துகொள்ளவேண்டும். இத்தகைய செயல்கள் விடுதலைப் புலிகளுக்கு அரசியல்தீர்வின் மீது உறுதிப்பாடு குறித்து ஐயங்கள் உருவாக்குவது மட்டுமின்றி அவர்கள் அமெரிக்காவில் ஒரு பயங்கரவாதக் குழுவாக தடை செய்யப்பட்டிருப்பதை சரி என காட்டுவதாகவும் அமையும்.

அமெரிக்க இராஜாங்க செயலகத்தின் பேச்சாளர் ரிச்சர்ட் பவுச்சர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (க)

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரின் சடலம் நேற்று வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. மரண விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான புலன் விசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)


Athisha's Art and Designs

♡ FABRIC PAINTINGS AND SAREE, SURDITHAR WORKS:
சாறி வேலைப்பாடுகள், சுடிதார், சோளி கிட் வேலைப்பாடுகள் சுவர் அலங்காரங்கள் மேசைவிரிப்புகள், தலையணை, படுக்கை விரிப்புகள் அலங்கரித்தல்.
♡ POTTERY WORKS
மட்பாண்ட அலங்காரங்கள்
♡ DRY FLOWER ARRANGEMENTS
♡ GREETING CARD MAKING.
வார நாள்களிலும் சனி,ஞாயிறு தினங்களிலும் வசதிக்கு ஏற்ப வகுப்புகள்
புதிய வகுப்பு ஆரம்பம் இன்று பிற்பகல் 3.00 மணி
சாறிகள், சுடிதார், ரீ-சேர்ட் என்பவற்றிற்கு ஓடருக்கு கை வண்ண அலங்கார வேலைகள் செய்துகொடுக்கப்படும்.
T.P.: 222 -6043
90, சட்டநாதர் வீதி,நல்லூர்.
(இளங்கலைஞர் மன்றத்திற்குச் சமீபமாக)



CHEMISTRY GROUP CLASSES
DIAS B.Sc. (Hons)
2005 2006
★ ORGANIC ★ GENERAL
★ PHYSICAL ★ THERMO
ஆரம்பம்: 05.03.2004 வெள்ளி
104/4, Cross Rd, Atthiyady.
(29158)(31)



இறுதிச் சந்தர்ப்பம்
புவியியல்
திரு. பாபு
A/L 2004
★ மானிடப் புவியியல்
★ சூழல் புவியியல்
பகுதி I
(வினா - விடை வகுப்பு திங்கள் - வெள்ளி வரை தினமும் 2.30 p.m.) ஆரம்பம் 3.3.2004 2.30 p.m.
விக்னா கல்வி நிறுவனம்
(29167)(31)



SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்
இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP — Duration 6 Months
DIPLOMA IN DESKTOP PUBLISHING — Duration 4 Months
DIPLOMA IN COMPUTER PROGRAMMING — Duration 12 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING — Duration 4 -5 Months
DIPLOMA IN VISUAL BASIC — Duration 4 Months
DIPLOMA IN VISUAL FOXPRO — Duration 4 Months
DIPLOMA IN AUTOCAD — Duration 4 Months
DIPLOMA IN C++ — Duration 5 Months
DIPLOMA IN NETWORK ENGINEERING — Duration 4 Months
புதிய பிரிவு ஆரம்பம் 06.03.2004
Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170
scclanka@notmail.com
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India.
T.P: +91-44-4891286



தவறிவிட்டது

நேற்றுப் பிற்பகல் யாழ். நகரப் பகுதியில் இருந்து அச்சுவேலி நோக்கி பஸ்ஸில் பயணம் செய்யும்போது தாலிக்கயிற்றுடனான முடியும், ஒரு சோடி தோடும் உரியவர்களால் தவறவிடப்பட்டுள்ளது.

தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

க.மகாலிங்கம்,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
T.P.: 0777 222131, 0777 113886.
(29209)(31)



காணவில்லை



கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நம்பிக்கை இல்லம், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கண்டுத்துரை சுபாஸ்கரன் (வயது14) என்பவர், நேற்றுமுன்தினம் (01.03.2004) பாடசாலை சீருடையுடன் காணாமற் போயுள்ளார். ( இவர் பொது நிறம் உடையவர், கால் பகுதி அங்கவீனம் உடையவர்) இவரை உறவினர்கள் தேடுகிறார்கள்.

இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பொறுப்பாளர், நம்பிக்கை இல்லம், இணுவில்.
(29208) T.P.: 021 222 3390, 021 222 3570 (31-14-17)


## மரண அறிவித்தல்

### திருமதி ஏகநாயகி தருமராசா



காரைநகர், கோவளத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி ஏகநாயகி தருமராசா கொழும்பில் 01.03.2004 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - முத்தம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - மாரிமுத்து தம்பதியின ரின் அன்பு மருமகளும் கொழும்பு, கொம்பனித்தெரு சிறி அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வேலுப் பிள்ளை தருமராசாவின் அன்பு மனைவியும் கணேசராசா (கனடா), அருள்ராசா (சுவிஸ்), விக்கினராசா (சுவிஸ்), சசிகலா (கொழும்பு), கிருஷ் ணராசா (கனடா), சந்திரகலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரேமிளா (கனடா), செரினா (சுவிஸ்), ஜெயசுதா (சுவிஸ்), Dr.தவயோக ராஜா (கொழும்பு), பிரதீபா (கொழும்பு), சிறிகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவீணா, ஹரணி, வின்சி, பாலச்சந்திரன், அபிராமி, கௌசல்யா, சிந்துஜா, இந்துஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.03.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பொரளை ஜயரத்தின மலர்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.
தொலைபேசி - 2424806.


EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது ரோல்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம் – 021 2223891, 021 2226297, 071 2348888
கொழும்பு – 011 4512666(3 Lines) Fax - 011 4514700
E-mail:jaffna@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.